உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளிவரும் இதழ்

e-magazine

www.aanmeegamalar.com

# ஆன்மிகமலர்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

மெயில் புக்

மலர்-6 இதழ்-162

ஜூன் 1-15 2023

விருப்ப சந்தா செலுத்த ஸ்கேன் செய்யவும்



## உத்தம நூலில் கலியுகத்தின் கணிப்புகள்

## சித்தர்களை நாடினால் இறைவனை அடையலாம்

## தமிழர்களை முட்டாளாக்கிய வந்தேறிக் கூட்டத்தினர்

e-magazine

www.aanmeegamalar.com

# இறந்தவர்களை உயிருடன் எழுப்பும் மந்திரம்

இராமன், பலராமன், இலக்குவன், பரதன், சூரியன், அக்கினி, குபேரன், இந்திரன், பிரமன், திருமால், சிவன், கணபதி, கந்தன், மன்மதன், நந்தி, மனு, உலோபா முத்திரை, அகத்தியர், துர் வாசர், சநகாதி முனிவர்கள், திருமூலர்.

இவர்களெல்லாம் ஸ்ரீவித்யை மந்திரம் ஜெபித்து உயர்நிலை அடைந்தவர்கள். இத னால் ஆதிபராசக்தியின் அருள்பெற்று உயர்ந்தவர் களாவார்.

தாடகையைக் கொல்ல இராமனுக்கு விசுவா மித்திரர் உபதேசம் கொடுத்த மந்திரம் பாலா மந்திரம். அதனை “வாலை மந்திரம்” என்பார். சித்தர்களின் உபாசனைத் தெய்வம் வாலைத் தாயார் ஆவார்.

ஸ்ரீவித்யை போல சிறந்த இன்னொரு மந்திரம் உண்டு. அசபா காயத்ரி என்று பெயர். அது ஹம்சம், ஸோஹம் என்று இரண்டு வகை.

அசபை, அசபா, காயத்ரி, அம்ச மந்திரம், அங்குச மந்திரம், ஜீவ மந்திரம் எனப் பலபெயர் இந்த மந்திரத்திற்குண்டு.

இதனைப் பயபக்தியுடன் ஜெபித்தால் இறந்த வர்களை எழுப்பலாம். நினைத்த எல்லாம் கைகூடும். முத்தி கிடைக்கும் கரநியாசம் அங்க நியாசம், அதற்கான முத்திரைகள் என விதிமுறைகளோடு ஜெபித்தால் நிச்சயம் பலன் உண்டு.





# மன அமைதியை கொடுக்கும் ருத்ராட்சம்

மந்திரம் சொல்லாமல் இருந்தால் கூட உண்மையான ருத்ராட்சம் அணிந் தால் மனது அமைதியாக இருக்கும். பாகவதம், சிவப்புராணம் ஆகிய இவை இரண்டிலும் ருத்ராட்சத்தைப் பற்றி சிறப்பாக கூறப்பட்டுள்ளது. ருத்ராட்சம் அணிவதால் பாவங்கள் நீங்குவது மட்டும் இல்லாமல் மருந்துனால் குணம் ஆகாத வியாதியைக் கூட ருத்ராட்சம் அணிந்தால் குணம் ஆகும்.

மன அமைதி இன்றி அவதிப்படுபவர்கள் உண்மையான ருத்ராட்ச மாலையை அணிந்தால், அவர்கள் மனதில் இனம் புரியாத ஒரு வகை அமைதி கிடைக்கும். இது நாளடைவில் முழுமையான மன அமைதியை உருவாக்கும் வல்லமை பெற்றது ருத்ராட்சம்.

வேலை பளு, மனச் சோர்வு போன்றவற்றாலும், குடும்பத்தில் குழப்பம் போன்றவற்றால் அவதிப்படுபவர்கள் கூட, ருத்ராட்ச மாலை அணிந்து சிவன் சன்னதியில் சிறிது நேரம் மௌனமாக அமர்ந்திருந்தாலே அவர்களுக்கு மன அமைதி என்பது உடனடியாக ஏற்படுத்தும் ஆற்றல் ருத்ராட்சத்திற்கு உண்டு....

# பக்தியின்மீது ஆசையா? காம குரோதம் தடுக்கிறதா?

# சித்தர்களை நாடினால் இறைவனை அடையலாம்

சிவன் இருக்கும் இடங்களில் சித்தர்களின் வாசம் அதிகமாக இருக்கும் என்பார்கள், இதற்கு என்ன காரணம் என்று பார்த்தால்?

யோக சாஸ்திரத்தில் சிவன் என்பவன் கடவுள் அல்ல, ஆதி சித்தன். அதாவது முதல் சித்தன். சித்தர்கள் வேதங்கள் ஓதுவதை காட்டிலும், தியானம், தவம், ஆத்மாவை அர்ப்பணித்தல் போன்ற வழிகள் மூலமாக இறைவனை அடைய முடியும் என்பதை நிரூபித்தவர்கள்.

அவர்களும் இந்த முறைகளையே பின்பற்றினர். சித்தர்கள் சிவனை கடவுளாக பார்ப்பதை விட குருவாக தான் பார்கிறார்கள். இதனால்தான் குரு இருக்கும் இடத்தில் சிஷ்யர்களின் நடமாட்டம் அதிகமாக காணப்படுவதாக கூறப்படுகிறது.

அதேப் போன்று ஜீவ சமாதிக்கும் சித்தர்களின் ஜீவ சமாதிக்கும் கூட வித்தியாசம் உள்ளது.

ஜீவசமாதி என்றால் ஜீவனை சமாதியாக்குவது என்று பொருள். ஜீவன் என்பது உயிர். சமாதி என்றால் கட்டிடம் என்றோ, புதைத்தவர்களின் மேல் எழுப்பப்படும் கட்டுமானம் என்றோ கருத வேண்டாம்.

சமாதி என்பது சம்+ஆதி என்று பொருள் படும். அதாவது மனம்+ஆதி. ஆத்மாவானது உடலை அடையும் போது எவ்வளவு தூய்மையாக இருந்ததோ அதே தூய்மையை மீண்டும் பெற்று உன்னத நிலையை அடைவது என்று பொருள்.

ஒவ்வொருவரும் பிறக்கும் போது தூய்மையான அத்மா வாகதான் பிறக்கிறோம். ஆனால் வளரும் போது, காலம் செல்ல, உலகம் என்னும் மாயையில் சிக்கி பல பாவங்களை செய்கிறோம், ஒவ்வொரு நாளும்



www.aanmeegamalar.com
www.aanmeegamalar.com
www.aanmeegamalar.com



பாவத்தின் கணக்கை கூட்டி ஆத்மாவனத்தை அசுத்தம் செய்கிறோம்.

ஆக ஜீவசமாதி என் பது உயிர் என்ற ஆத்மாவானது, ஒரு உடலை தேர்ந்தெடுத்து அதில் சஞ் சரிக்கும் போது, எவ்வளவுதூய்மை யாக இருந்ததோ, அதே தூய்மை யான நிலையை மீண்டும் அடைந்து பரமாத்வாவிடம் ஒருங்கிணைவது என்று அர்த்தம். இதை செய்வது என்பது சாதாரண விஷயம் அல்ல. தியானம், தவம், கடு மையான விரதங்கள், என கடுமையான மனநிலைகளை கடந்து தான் இந்த ஜீவ சமாதியை நம்மால் அடைய முடியும்.



ஒருவர் ஜீவசமாதி ஆகும் போது அவரின் உடல் அழு குவது இல்லை. மாறாக ஜீவனற்ற அந்த உடல் சுருங்கி, வற்றி போகும். கெட்டு போகாது இது எப்படி என்ற கேள்விக்கெல்லாம் விடை காயகல்ப்பம்.

காயகல்ப்பம் என்பது இரண்டு வகைப்படும் ஒன்று நாம் உட்கொள்ளுவது அதாவது மூலிகை தயாரிப்பு. மற்றொன்று சுவாச பயிற்சி.

இங்கே ஜீவசமாதி அடைபவர்கள் இரண்டாவது வகை காயகல்பத்தில் தேர்ச்சி பெற்றவர் களாக இருப்பார்கள். இந்த சுவாச பயிற்சியின் படி, ஒருவர் மூச்சை அடக்கி, மூச்சு விடாமல் உயிர் வாழ முடியும். இதய செயல்பாடு, மூளை செயல்பாடு, மன ஓட்டங்கள் என அனைத்தையும் நிறுத்திவைத்து ஆன்மாவை மட்டும் விழித்திருக்க செய்வார்கள்.


உடலில் ஆன்மா இருக்கும் ஆனால் மூளை செயல்பாடு, இதயத்துடிப்பு இல்லாமல் போவதால், உயிரற்ற உடலை போல் தெரியும். இவ்வாறு ஜீவசமாதி ஆகும் மகான்கள் தங்கள் உடலை விட்டு பஞ்சபூத நிலைகளில் எந்த நிலையில் வேண்டுமானாலும் தங்களின் ஆத்மாவை உருவகம் செய்துகொள்ள முடியும் என்று அகத் தியர் கூறுகிறார்.

பொதுவாக ஜீவசமாதி அடைபவர்கள் உலக நன்மைக்காக வேண்டியே அதை செய்வார்கள். அப்படி செய்யும்போது அந்த எண்ணங்கள் அவர்கள் உடலோடு ஒன்றி இருக்கும். அந்த எண்ணங்களின் அதிர்வுகள் அந்த ஜீவசமாதி யின் மீது இருக்கும் கட்டுமானங்களில் எதிரொ லித்து கொண்டே இருக்கும்.

நாம் அவற்றை வலம்வரும் போது, அந்த அதிர்வுகலானது நம் மனதையும் தாக்கி, அதை தூய்மை செய்து, நல்ல சிந்தனைகளை நம் மனதிற்குள் விதைத்துவிடும்.

பல மகான்கள் ஜீவசமாதியை தேர்ந் தெடுக்க இதுவே முக்கிய காரணம். மறுபுறம் சாதாரண மனிதர்களின் சமாதி என்பது இப்படி இல்லை. அவர்களின் உடல் அழுகிவிடும்.

எந்த ஒரு அதிர்வுகளும் இருக்காது.




www.aanmeegamalar.com

ஏனென்றால் அவர்களுக்கு இந்த சூட்சமங்கள் தெரியாது. தெரிந்தவர்கள் மகான்கள் ஆகி றார்கள். சூட்சமத்தை பயன்படுத்தி ஜீவ சமாதி அடைகிறார்கள்.

ஒருசில ஜீவசமாதியில் சித்தர்கள் அரு பொருளாக உலா வருவதாகவும் கூறுவார்கள், குறிப்பாக ஒருசில கோவில்களில் இதுபோன்ற சித்தர்களின் ஜீவ சமாதி அமைந்திருக்கும்.

இவர்களின் ஜீவ சமாதி அமைந்திருக்கும் இடத்திற்கு தேடிச் சென்று வணங்கினால் நமது உடலிலும், உள்ளத்திலும் ஏற்படும் தீய எண்ணங்கள் சக்திகள் தன்னால் மறைந்து போகும், மேலும் சிவ வழிபாட்டிற்கு இடையூறாக இருக்கும் காம குரோதம் போன்ற தீய எண்ணங்கள் மெல்ல மறையும் என்பதால் சிவ வழிபாட்டை ஏற்கும் அனைவரும் சித்தர் களின் ஜீவ சமாதியை நாடிசெல்வது வழக்கம்.

இறைவன் மீதும், பக்தி மீதும் ஆசை யிக்கும். ஆனால், அதீத காம உணர்வு, பொன், பெண் ஆசை, சுகபோக வழ்க்கைமீது பற்று போன்றவற்றில் உழல்வதால் இறை நிலையை அடைய முடி யாமல் தவிர்ப்பவர்கள், அவசியம் சித்தர்களின் ஜீவ சமாதியில் அமர்ந்து தியானம், யோகம் செய்து வந்தால் மேற்கண்ட தீய செயல்கள் மெல்ல தங்கள் மனதிலிருந்து அகலுவதை கண்கூடாக காண முடியும்.



எப்போதும் சித்தர்கள் போக்கு சிவன் போக்கு என்பார்கள், அதனால் இவர்களை சாதா ரணமான மனித வாழ்க்கையில் இருப்பவர் கள் புரிந்து கொள்வது கடினம்.

சித்தர் போன்ற தோற்றமுடையவர் கள், மற்றவர்கள் சித்தராக வணங்குபவர்களை வணங்க விரும்பவில்லையென்றாலும், கேலி, கிண்டல் செய்யாமல் ஒதுங்கி விடுவது நமக்கும் நமது சந்ததியினருக்கும் நன்மை.

இறைநிந்தனையைவிட, இறைவனை வணங்கும் பக்தனை நிந்தித்தால், பல தலைமுறை தலையெடுக்க முடியாத சாபம் அவர்கள் குடும்பத்தைசேரும் என்பது ஆன்றோர் மொழி.

அனைத்து மனித உள்ளங்களிலும் கடவுள் இருக்கிறார், அதனால் எந்த நிலையில் உள்ள மனிதனையும் கேலி கிண்டல் செய்யக் கூடாது என்று நமது முன்னோர்கள் கூறினார்கள்.

# இறைவனை வணங்கும் முறை

இறைவனை வணங்கும்போது சிலர் கைகளை தலைக்குமேல் தூக்கி வணங்குகிறார்கள். சிலர் கைகளைக் குவித்து முகத்திற்கு அருகில் வைத்து வணங்குகிறார்கள். எது சரியானது?



இவை இரண்டு முறை மட்டுமல்லாதுஇன் னும் சிலர் நெஞ்சுக்கு நேராகக்கைகளைக் குவித்து வணங்குவர். இவை அனைத் துமே சரியானதுதான். கைகளை தலைக்குமேல் தூக்கி வணங்குவது என்பது உன்னை விட்டால் எனக்கு வேறு யாருமில்லை, நீ ஒருவனே எனக்குத் துணை என்று இறைவனைச் சரண் அடைவதன் வெளிப் பாடு. திரௌபதி கண்ணனைச்சரண டைந்தாளே அப்படி. முகத்திற்கு அருகில் கைகளை குவித்து தலை குனிந்து வணங்குவது என்பது அடக்கத்தின் வெளிப்பாடு.



உனக்குக் கீழ்தான் உலகமே இயங்குகிறது என்ற பொருளில் சாதாரணமாக எல்லோரும் வணங்குகின்ற முறை. நெஞ்சிற்கு நேராக கைகளைக் குவித்து வணங்குவது என்பது இறைவா உன்னை என் நெஞ் சிற்குள்ளேயேவைத்திருக்கிறேன், எப்பொழுதும் என்னுடனேயே இருந்து என்னைக் காப்பாய் என்ற எண்ணத்தினைக் குறிக்கும்.



இவ்வாறாக அவரவர் எண்ணத்திற்குத்தக்க வாறு வணங்கும் முறை யானது வேறுபடுகிறது. இதில் சரி, தவறு என்று எதுவுமில்லை.

"அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பெதற்கு" ✗

"அடுப்பூதும் பெண்ணுக்கு படி பூ எதற்கு?" ✓

# தமிழர்களை முட்டாள்களாக்கிய வந்தேறிக் கூட்டத்தினர்

அடுப்பூதும் பெண்களுக்கு படிப் பூ எதற்கு? இந்த வாக்கியத்தை பயன்படுத்தி தமிழ்நாட்டில் பல தலைவர்கள் பல்வேறு விதமான அரசியல் செய்து பெரும் பணம் ஈட்டி, சொகுசு வாழ்க்கை வாழ்ந்து வருவது அனைவருக்கும் தெரியும்.

இதில் இன்னொரு சுவாரஸ்யம் என்னவென்றால் "அடுப்பூதும் பெண்களுக்கு படிப் பூ எதற்கு?" இந்த அருமையான வாக்கியத்தை திரித்துகூறிய அனைத்து தலைவர்களும் தமிழர்கள் கிடையாது, தமிழ்நாட்டை அண்டிப்பிழைக்க வந்தே கூட்டத் தினர்.

இவர்களின் குறிக்கோள் தமிழர்களையும், தமிழ்மொழியையும் சிதைப்பது, தமிழர் கலாச்சாரத் தையும், ஆன்மிகத்தையும் இழிவுபடுத்துவது ஒன்றே குறிக்கோள்.

இந்த பழமொழியின் உண்மையான அர்த்தம் பலருக்கும் தெரிய வாய்ப்பில்லை. இதைப் பற்றி விரிவாக பார்ப்போம், வாய்ப்பு கிடைப்பவர்கள், அந்த முட்டாள் தலைவர்களின் வாரிசுகளுக்கு இந்த பழமொழியின் விளக்கத்தை எடுத்துரைப் போம்.

"பெண்கள் படிக்க போக கூடாது, பெண்கள் வீட்டு வேலைகளை மட்டுமே செய்யவேண்டும், உதாரணமாக அடுப்படியில் வேலை மட்டுமே செய்ய வேண்டும்" என்று தமிழர்களில் காதில் பூ சுற்றிவிட்டனர் திராவிடர்கள்.

நாமும் அவர்கள் சுற்றுவது பூ என்பது தெரியாமல் வந்தேறி திராவிடர்கள் சொன்னதை நம்பி, நமது கலாச்சாரத்தை நாமே கேலியும் கிண்டலும் செய்திருப்போம்.

"இது தவறாக பரப்பட்ட வதந்தி அவ்வளவு தான்"

"பழமொழியின் உண்மை யான அர்த்தம்:"



படி பூவை தலையில் சூடியவாறு அடுப்பூதும் பெண்

"அந்த காலத்தில் பெண்கள் தலை யில் ஒருபடி அளவு கொண்ட பூவை சூடுவது வழக்கமான ஒன்றாக இருந்தது"

"குமரி பெண்கள் தலையில் ஒரு படி பூவை வைத்துக்கொண்டு சமையல் வேலை செய்யும் பழக்கம் இருந்தது"

"இப்போது போல அந்த காலத்தில் கேஸ் ஸ்டவ் எல்லாம் கிடையாது"

"அனைவருமே விறகு அடுப்பில் தான் சமை யல் செய்தாகனும்"

"விறகு அடுப்பை அப்ப அப்ப ஊதுகுழல் கொண்டு ஊதும் வழக்கம் உள்ளது"

"அந்த காலகட்டத்தில் வீட்டில் உள்ள பெரிய வயதான பாட்டிகள் வீட்டில் உள்ள இளம் குமரி களை பார்த்து நீ அடுப்பு ஊதுற அந்த நேரத்தில் ஒரு படி பூவை தலையில் வைத்துக் கொண்டு அடுப்பை ஊதினால் அடுப்பின் அனலுக்கு தலையில் வைத்த ஒரு படி பூவும் கருகி போகும்"

"ஆகவே சமையல் முடித்து குளித்து பூவை சூடுங்கள் என்று அறிவுரை சொல்லுவாங்க"

"அப்படி கூறும் அறிவுரை தான் **"அடுப்பூதும் பெண்ணுக்கு படி பூ எதற்கு?"** என்று சொல்வது வழக்கம்"

"அடுப்பை ஊதுர பெண்ணுக்கு படி பூ எதற்கு என்பதை தான் வந்தேறிகளான திராவிடக் கூட்டம் மாற்றிவிட்டு, தமிழர்களை முட்டாளாக்கி, தாங்கள் அறிவாளிகாக காட்டிக்கொண்டு கோடிகளை சுருட்டி வசதி வாய்ப்போடு ராஜ வாழ்க்கை வாழ்ந்துள்ளனர்.

ஒருநிமிடம் தமிழர்கள் சிந்தித்து பார்க்க வேண்டும் திராவிடம் என்ற வாதத்தையை தென்னிந்திய மாநிலங்கள் ஏற்காக போது, தமிழர்கள் மட்டும் தங்கள் அடையாளங்களை அடமானம் வைத்து இந்த திராவிடர்களிடம் ஏமாந்ததுதான் மிச்சம். இவர்களுக்கம் தமிழுக்கும் எந்த சம்பந்தமும் கிடையாது.

தமிழில் அடுக்குமொழி பேசவும் எழுதவும் மட்டுமே கற்றுக்கொண்டு ஒரு தலைமுறை தமிழர்களை ஏமாற்றிவிட்டனர்.

இதுபோன்று எத்தனையோ வார்த்தைகளை இவர்கள் திரித்து கூறியுள்ளனர். இனி இவர்களின் திரித்து கூறிய வார்த்தைகளை அலசி ஆராய்ந்து பார்க்கும் காலகட்டத்தி நம் தமிழ் சமுதாயம் உள்ளது.

திராவிடர்களை ஒதுக்கி நாம் சுத்த தமிழர்களாக, தமிழ் மொழியின் சுவையை சுவைக்க இனி பழக்கப்படுத்திக் கொள்வோம்.

ஆன்மிகமலர்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!



அறிவுரைக்குப் பின் படி பூவை தலையில் சூடாமல் அடுப்பூதும் பெண்



# யாரெல்லாம் சிவனடியார்கள்?

சைவநெறி, சமையநெறி மற்றும் சைவ சித்தாந்த நெறியில் கூறப்பட்டுள்ளசிவனடியார் களைப் பற்றியும் சிவனடியார் அகநிலை இலக்கணம் பற்றிப் பார்ப்போம்.

❖ சிவனுக்கு (பரம்பொருளுக்கும் அவரை பற்றுக் கோடாக கொண்டுவழிபடும் சிவனடி யார்களுக்கும்) யான் அடியார் என்று எண்ணி மகிழ்பவன் உண் மையான சிவனடியார்.

❖ தனக்கு உகந்ததை (தன்னால் தன் சக்திக் கேற்றவாறு இருப்பதை கொடுப்பவன்) சிவனுக்கு படைத்து மகிழ்பவன் உண்மை யான சிவனடியார்.

❖ சிவனுக்கு உகந்ததை (சிவச்சின்னங்கள், திருவைந்தெழுத்து மந்திரம், உலகத்தில் உள்ள அத்தனை உயிர்களையும் சிவமாகவேபார்க்கும் தன்மை) தானும் உகந்து மகிழ்ப வன் உண்மையான சிவனடியார்.

❖ அண்டசராசரத்தை (தனு, கரண, புவண, போகம்) படைத்து அதில் இன்புற வாழ, என்னையும் படைத் தான் என்பதை இன்புறும் போதெல்லாம்மற வாது நினைப்பவன் சிவனடியார்.

❖ சிவபெருமான் மட்டுமே தனக்கு வேண்டி யதை வேண்டாமலே கொடுக்கவல்லவன் என்பதை உணர்ந்து வாழ்பவன் சிவனடியார்.

❖ சிவனிடம் தான் பெற்றதை (யாம் பெற்ற இன்பம் பெருக இவ்வையகம் என்பது போல) பிறருக்கு கொடுத்து மகிழ்பவன் சிவனடியார்.

❖ பிறருக்கு தான் (தானமாக) கொடுத்ததை, சிவன் கொடுத்ததே என்றுஎண்ணி அவரி டம் இருந்து திரும்பப் பெற வேண்டும் என எதிர்பாராது இருப்பவன் சிவனடியார்.

❖ துன்பங்களும், நோய்களும் தன்னை சூழ்ந்த வினை களை போக்க வந்தவை என்று உணர்ந்து அனுபவித்து வினைகளை அகற்ற வல்லவன் சிவனடியார்.

❖ தனக்கு துன்பம் தரும் காரணிகள் யாவும், பிறரால் ஏற்படுத்தப்பட்டது அல்ல. தன்னாலே வரவழைக்கப் பட்டது என்று உணர்பவன் சிவனடியார்.

❖ தான் இன்புற தடை ஏதும் விதிக்காதவன் சிவன் என நம்புபவன் சிவனடியார்.

❖ இன்புறலும், துன்புறலும் தன் ஆன்மாவை சிவன டிக்கு இழுத்துசொல் லும் இரட்டை

மாடுகள் என உணர்ந்து ஒவ்வொரு அனுபவத்திலும் தன் வினை அகன்று போவதை அறிந்து நொடிக்கு நொடி அதிகரிக்கும் ஆனந்தத்தொடு (இன்பமாக) வாழ்பவன் சிவனடியார்.

❖ தானே சிவமாக சிவானந்த பேரின்பத்தில் மூழ்கி இருந்தாலும் சிவனொருவன் மட்டுமே எல்லாம் தர வல்லவன் என்பதை மறவாது இருப்பவன் சிவனடியார்.

❖ தன்னால் ஆக வேண்டியது என சிவனார் பணித்த (தன்னை கருவியாக நினைத்து) தன் பிரபஞ்ச கடன் மட்டுமே தன்னாலாகும் என உணர்ந்து நடப்பவன் சிவனடியார்.

❖ சிவனை நாட, தடை ஏதும் சொல்லாதிருப்பவன் சிவனடியார்.

❖ சிவனால் ஆகும் பிரபஞ்ச (உலகத்தில் இயங் கும் பொருள்கள் எல்லாம்) செயல்களை பார்த்து, ரசித்து மகிழ்பவன் சிவனடியார்.

❖ தனக்கென ஒரு பிரபஞ்ச கடனை (உலகத் தில் மனிதனாக பிறக்க வைத்து தனது கடமைகளை சரிவர செய்வதற்காக) தந்து, தன் பணியில் என்னையும் இணைத்துக் கொண்டானே அந்த சிவன் என எண்ணி அளித்த பிறவியை (மானிடப் பிறவியை சிவமாகவே வாழ்ந்தோமே என்று) வியந்து போற்றி வாழ்பவன் சிவனடியார்



❖ உண்மையான சிவனடியார் சிவபெருமானுக்கும் அவரை பற்றுக் கோடாக கொண்டு வழிபடும் சிவனடியார்களுக்கும் தேவை அறிந்து தொண்டு செய்பவனே சிவனடியார் ஆவார்

❖ எல்லாம் பரம்பொருள் (சிவபெருமான்) கொடுத்தது என்று எண்ணி எல்லா உயிர்களிடத்தும் உண்மையான அன்பு செலுத்துபவனே சிவனடியார் ஆவார்

❖ என்னால் நடப்பது ஒன்றுமில்லை எல்லாம் சிவபெருமானால் நடத்தப்படுகிறது என்று நினைப்பவன் சிவனடியார் ஆவார்

❖சிவபெருமானிடத்தும், சிவனடியார்களிடத்தும் உண்மையாக உள்ளன்போடு தொண்டு செய்து வாழ்பவனே உண்மையான சிவனடியார் ஆவார்.

## விரைவில்...



காசியைப் பற்றி முழுமையான தகவல்களை பல்வேறு மொழிகளில் எழுதி, அனைவரும் காசியைப் பற்றி அறிந்து கொள்ள பல்வேறு முயற்சிகளை செய்யும் எழுத்தாளர் **பி.எஸ்.வெங்கடரமணன்** எழுதும்

## ஆன்மிக பூமி காசியின் புனிதமும் வரலாறும்



புதிய தொடர்... ஆன்மிகமலர்.காம் இணையதள இதழான **ஆன்மிகமலர் மெயில் புத்தகத்தில்** விரைவில் வெளிவரவிருக்கிறது.



# தானத்தின் பலன்களும் சிறந்த தானமும்

- அரிசியை தானம் தர பாவங்கள் தொலையும்
- வெள்ளியை தானம் தர மனக்கவலை மறையும்
- தங்கம் தானம் தர தோஷம் விலகும்
- பழங்களைத் தானம் தர புத்தி, சித்தி கிட்டும்
- தயிர் தானம் தர இந்திரிய விருத்தியாகும்
- நெய் தானம் தர நோயைப் போக்கும்
- பால் தானம் தர துக்கநிலை மாறும்
- தேன் தானம் தர பிள்ளைப்பேறு கிட்டும்
- நெல்லிக்கனி தானம் தர ஞானம் உண்டாகும்
- தேங்காய் தானம் தர நினைத்த காரியம் வெற்றி அடையும்
- தீபங்களை தானம் தர கண்பார்வை தெளிவாகும்
- கோ (மாடு) தானம் தர ரிஷி, வேத, பிதிர்கடன் விலகும்
- பூமியை தானம் தர பிரம்மலோக தரிசனமும் ஈஸ்வரலோக தரிசனமும் கிட்டும்
- ஆடையை தானம் தர ஆயுள் விருத்தியாகும்
- அன்னத்தை தானம் தர தரித்திரமும் கடனும் தீரும்.
- அறிவை தானம் செய்ய பலமடங்காய் பெருகும்

தானத்தில் சிறந்தது அன்னதானம் என்று நினைக்கின்றான் மனிதன்!

ஆனால் உண்மையில் பிறருக்கு வழிகாட்டுவது தான் சிறந்த தானம், ஏழை எப்போதும் ஏழையாகவே இருப்பான்.

www.aanmeegamalar.com



ஆனால் இன்று தானம் பெறுபவன் நாளை பெறும் நிலையிலிருந்து மாறி தன் தேவையை தன்னாலேயே பூர்த்தி செய்து கொள்ளும் வகையில் அவனுக்கு அறிவையும், கல்வியையும் தந்தால் அவன் வாழ்க்கை முழுவதும் நாம் தானம் செய்தால் கிடைக்கும் பலன் கிடைக்கும்.

பசித்தவனுக்கு உணவு கொடுப்பதை விட அவன் நாளைய உணவை தேட வழி சொல்லிக் கொடுப்பது சிறந்த தான தர்மம்.

இல்லாதவர்க்கு கொடு என்று சொல்கின்றனர், ஆனால் உண்மையில் இல்லாதவன் இருப்பவனாக மாற்றவைப்பதே சிறப்பு.

## யாருக்கு அன்னதானம் செய்யலாம்?

பணிசெய்ய முடியாத நிலையில் தளர்ந்தவர்கள், சுயமாக சம்பாதிக்கும் நிலையில் இல்லாத ஊனமடைந்த உடல் கொண்டோர், தன்னிலை மறந்து சிந்தம் கலங்கிய நிலையில் உள்ளோர், உடல் தளர்ந்த நிலையில் உள்ள வயதானோர், பெற்றோரை இழந்து உலகம் அறியா நிலையில் உள்ள குழந்தைகள் போன்றவர்களுக்கு வழிகாட்டுவதைவிட அவர்களை பராமரித்து நிரந்தர உணவிற்கு வழிவகை செய்வது மற்ற எல்லா தான தருமங்களைவிடவும் உச்சிதமான பலன்களைக் கொண்ட தானமாக கருதப்படும்.

# தானத்தில் தவிர்க்க வேண்டிய பொருட்கள்

எந்தக்காரணத்தைக் கொண்டும் இந்தப் பொருட்களை தானம் கொடுத்துவிட வேண்டாம்.

## துடப்பம்:

வீட்டினை சுத்தம் செய்யும் துடைப்பம் லட்சுமி தேவியின் அடையாளமாக கருதப்படுகிறது. அதனால் மறந்தும் கூட வீட்டை சுத்தப்படுத்தும் துடைப்பத்தை தானம் செய்யக் கூடாது. வீட்டில் உள்ள துடைப்பத்தை தானம் செய்பவர்கள் வறுமையை ஏற்படும். அத்துடன் பலவிதமான நோய்களும் அவர்களை சூழ்ந்து கொள்ளும் என்பது நம்பிக்கையாகும்.

## கெட்டுப்போன எண்ணெய்:

வீட்டில் பயன்படுத்திய அல்லது கெட்டுப் போன எண்ணெயை தானம் செய்வது அசுபமாக கருதப்படுகிறது. இவ்வாறு செய்வதால், சனி தேவரின் கோபம் உங்கள் மீது வரும். அப்படி, வரும் சனீஸ்வரரின் கோபப்பார்வை, உங்கள் வாழ்க்கையை நரகமாக்கிவிடும்.

## புத்தகங்கள் கொடுக்கும் போது:

நீங்களும் யாருக்காவது புத்தகங்கள் அல்லது நூல்களை நன்கொடையாக கொடுக்கும் போது, கிழிந்த புத்தகங்களையோ, நூல்களையோகொடுக்க வேண்டாம். இப்படிச் செய்வதால், உங்கள் குழந்தைகளின் கல்வியில் தடை ஏற்படும். அத்துடன் குழந்தைகளின் மகிழ்ச்சியை குழைத்து போடும். எனவே. அதற்கு பதிலாக நீங்கள் எப்போதும் அவர்களுக்கு புதியவற்றைக் கொடுங்கள்.


● ஆன்மிகம் ● தத்துவம் ● உடல்நலம் ● பலன்கள்

புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்

www.aanmeegamalar.com

ஆன்மிகமலர்.காம்

# காரிய சித்திக்கு இந்த மந்திரம் போதும்



சிவபெருமானின் மிருத்யுஞ்ஜய மந்திரத்தை எடுத்துக் கொண்டால் அதில் 33 எழுத்துக்கள் உள்ளன. இந்த 33 எழுத்துக்களிலும் உள்ள சக்திகளும் சிவத்தோடு சேர்ந்து நம் உடலில் 33 இடங்களில் நின்று இயங்கி வருவதாக வசிஷ்ட மகரிஷி கூறுகிறார்.

இந்த மந்திரத்தை ஜபம் செய்யும் போது அந்த சக்திமையங்கள் விழிப்படைந்து பிரபஞ் சத்திலிருந்து அந்த சக்திகளைத் தடையின்றி ஈர்த்து ஜீவனை பலமுள்ளவனாகவும், ஆயுள் உள்ளவனாகவும் ஆக்கி காக்கிறது. மரணத்தை வெல்லும் மந்திரமாக மிருத்யுஞ்ஜய மந்திரம் சொல்லப்படுகிறது.

த்ரியம்பகம் என்ற சொல்லுக்கு பல்வேறு கருத்துக்களை நம் முன்னோர்கள் முன் வைக்கி றார்கள். முக்கண் என்பார்கள். அதாவது வலது கண் சூரியன், இடது கண் சந்திரன், நெற்றிக்கண் அக்னி. இதுவே யோகநிலையில் சூரிய கலை, சந்திர கலை, சுழுமுனை அதாவது அக்னி கலை எனப்படுகிறது.

மூன்று சக்திகளையும் (இசஞ்சா சக்தி, க்ரியா சக்தி, ஞான சக்தி) உடையவர் என்பதால் த்ரியம்பகன். சத்துவம், இராஜஸம், தாமஸம் என்ற முக்குணங்களைக் கொண்டு ஜீவனில் நிலைப்ப தால் முக்குணங்களை முக்கண்ணாக உடையவர் என்பர் சிலர்.

வேதாந்தம் சித்தம், அஹங்காரம், புத்தி மூன் றையும் முக்கண்ணாகக் குறிப்பிடுகின்றது. இப்படி பல்வேறு கருத்துக்களையும் கூர்ந்து கவனித்தால், எல்லா கருத்துக்களும் யோக நிலையில் மேன்மையடையும் விஷயங்களைக் குறித்தே சொல்லப்பட்டிருப்பது புரியும்.

ம்ருத்யு என்றால் அஞ்ஞானம். அஞ்ஞானத்தை நீக்கி சம்சார பந்தத்திலிருந்து ஜீவனை ரட்ஷிக்கும் மந்திரம்.

எவர் ஒருவர் தனக்குத் தானே அந்த மந்திரத்

தின் பொருள் உணர்ந்து இடைவிடாது மனதில் உச்சரித்துக் கொண்டிருக்கிறாரோ, அவர்தம் சக்தி மையங்கள் விழிப்படைந்து ஆதாரச் சக்க ரங்கள் தூய்மை பெற்று, சுழு முனையாகிய மூன்றாவது கண் திறந்து, அதாவது ஞானம் பெற்று பிறப்பில்லாத நிலையை அடைவார். அதாவது மரணத்தை வெல்வார்.

இந்த மந்திரமானது

"த்ர்யம்பகம் யஜாமஹே
ஸுகந்திம் புஷ்டிவர்த்தனம் |
உர்வாருக மிவ பந்தனாத்
ம்ருத்யோர் முக்ஷீயமா அம்ருதாத் ||"

பந்தத்தை நீக்கி மரணத்தை வெல்லும் நிலையைத் தரும் மந்திரம். இடைவிடாது இந்த மந்திரத்தை மனதுக்குள் உச்சரித்துக் கொண்டிருப்பவர்களுக்கு குண்டலினியானவள் விழிப்படைந்து ஆறு ஆதாரங்களையும் சுலபமாகக் கடந்து சஹஸ்ராரத்தை அடைவாள்.

அதற்குத் தோதாக எல்லா சக்தி மையங்களும், ஆறு ஆதாரங்களும் தூய்மையடைந்து சிறப்பாக இயங்கிக் கொண்டிருக்கும். எனவே ப்ரபஞ்ச சக்தியோடு தொடர்பு ஏற்பட்டு குண்டலினியைத் தாங்கும் வலிமை தேகம் பெற்று விடும்.

இப்போது இந்த மந்திரத்திலுள்ள எந்தெந்த வார்த்தைகளை உச்சரிக்கும் போது எந்தெந்த சக்கரங்களில் உள்ள சக்திகள் சிறப்பாக இயங்கும் என்பதையும், அந்த சக்திகளோடு கூடிய சிவனின் பெயர்களையும் காண்போம்.

- த்ர்யம்பகம்: பூதசக்தி ஸஹித பவேச போதகர் மூலாதாரச் சக்கரம்.
- யஜாமஹே: சர்வாணீ சக்தி ஸஹித சர்வேச போதகர் சுவாதிஷ்டானம்.
- ஸுகந்திம்: விரூபா சக்தி ஸஹித ருத்ரேச போதகர் மணிபூரகம்.
- புஷ்டிவர்த்தனம்: வம்ச வர்த்தினி சக்தி ஸஹித புருஷவரதேச போதகர் அநாஹதம்.
- உருவாருகமிவ: உக்ரா சக்தி ஸஹித உக்ரேச போதகர் விசுத்தி.
- பந்தனாத்: மானவதீ சக்தி ஸஹித மஹா தேவேச போதகர் ஆக்ஞா.
- ம்ருத்யோர்முக்ஷீய: பத்ரகாளி சக்தி ஸஹித பீமேச போதகர் சகஸ்ராரம்.
- மாஅம்ருதாத்: ஈசானி சக்தி ஸஹித ஈசானேச போதகர் சகஸ்ராரம்.

சக்தியை வளர்த்து ஜீவனை அமிர்தமயமாகஆக்கி முக்தி நிலைக்கு கொண்டு சேர்க்கும் தாரக மந்திரம். இந்த மந்திரங்களை கடவுளே இல்லையென்று சொல்பவர்கள் கூட உச்சரிக்கலாம். பலன் நிச்சயம்.

பக்தியோடு உச்சரிப்பவர்கள் மனமும் வசப்படுவதால் எளிதில் காரியம் சித்தியாகும். இந்த விளக்கங்களெல்லாம் அறிவைப் பேரறிவு நிலைக்குக் கொண்டு செல்ல முனைபவர்களுக் காகவே சொல்லப்பட்டுள்ளது.

# ஆன்மிக மலர்கள்

- புத்திர பாக்கியம் இல்லாதோர் 6 தேய்பிறை அஷ்டமிகளில் காலபைரவருக்கு சகஸ்ர நாம அர்ச்சனை செய்தால் விரைவில் புத்திர பாக்கியம் கிட்டும்.
- வியாழக்கிழமைகளில் ஒரு நேரம் விரதம் இருந்து மாலையில் ஆலய தட்சணா மூர்த்திக்கு தொடர்ந்து நெய்விளக்கு ஏற்றி வர, விரதம் ஏற்ற 192 நாட்களில்கருத்தரிப்பு ஏற்படும் வாய்ப்பு உண்டு.
- சிவாலயத்தில் உள்ள ஸ்தல விருட்சத்தை 9 முறை சுற்றி வந்து நெய்விளக்கு ஏற்றி வழிபடசர்ப்ப தோஷம், கால சர்ப்ப தோஷம் நீங்கும்.
- வறுமையில் இருப்பவருக்கு தானம் கொடுத்தல், பூஜை நடக்காமலிருக்கும் கோவில்களில் பூஜை நடக்க உதவுதல், அனாதைப் பிணங்களின் தகனத்திற்கு உதவுதல் ஆகிய மூன்றும் செய்தால் அசுவமேத யாகம் செய்ததற்குச் சமம்.
- தொழில் தடை, கணவன் மனைவிக்கு கருத்து வேறுபாடு நீங்க, வாழ்வில் நலம் பெற, வெளிநாட்டு வேலை முயற்சி வெற்றி பெற, என்று நல்ல காரியங்கள் நடைபெற தேய்பிறை அஷ்டமி தோறும் நடைபெறும் சொர்ண பைரவர் பூஜையில் கலந்து கொள்வது நற்பலன் களைத் தரும்.
- எத்தகைய கிரக தோசமானாலும் தினமும் இரு வேளை சிவபுராணம் பாராயணம் செய்வது மிக, மிக நன்மை தரும்.
- வாழை தண்டு திரியினால் வீட்டில் தீபம் ஏற்றினால் குலதெய்வ குற்றமும், குல தெய்வ சாபமும் நீங்கும்.

ஆன்மிகத் தகவல்களை
எளிமையாக, பாமரர்களும் புரிந்து
கொள்ளும் வகையில்
ஆன்மிகமலர் மெயில்
புத்தகத்தில் (e-book)
வெளியிட்டு வருகிறோம்...

eBook DOWNLOAD
eBook
DOWNLOAD
eBook DOWNLOAD
free

இதுவரை வெளிவந்த
**160** க்கும் மேற்பட்ட
இதழ்களை

**aanmeegamalar.com**

இணையதளத்தில்
இலவசமாக
படிக்கலாம்.



# பரந்தாமனின் பெருமிதம்

'உண்மையான பக்தி எவரிடம் உள்ளதோ அவரைத் தேடி, நானே வருவேன்!' என்று கீதையில் பகவான் கிருஷ்ணர் சொல்லி இருக்கிறார். இதற்கு உதாரணமாக பல சம்பவங்கள் புராணங்களில் உண்டு. அவற்றில் ஒன்று இந்தக் கர்ண பரம்பரைக் கதை

'பாண்டவர்கள் வனவாசம் முடிந்து திரும்பினாலும், அவர்களுக்கு தேசத்தை திருப்பித் தர மாட்டோம்' என்றான் துரியோதனன். இதையடுத்து, பாண்டவர்களின் சார்பில் தூதராகச் சென்று, துரியோதனனைச் சந்திக்க முடிவு செய்தார் கிருஷ்ணர்.

பீஷ்மர், துரோணர், திருத ராஷ்டிரன் மற்றும் துரியோதனன்உள் ளிட்டோர்,கிருஷ்ண ரைத் தங்களது மாளிகையில் தங்க வைத்து உபசரிக்க விரும்பினர். எனவே, தங்களது மாளிகைகளை அழகுபடுத்தினர்.

ஊரெங்கும் தோரணங்கள் கட்டி, கிருஷ்ணரை வரவேற்பதற்கான ஏற்பாடுகளை சிறப்பாகச் செய்தனர். அஸ்தினாபுரமே விழாக்கோலம் பூண்டிருந்தது.


ஆனால், இதுகுறித்த எந்த தகவலும் விதுரனுக்குத் தெரியாது.

யார் இந்த விதுரன்?

வியாசரின் மைந்தர்; திருதராஷ்டிரனின்சகோதரன். ஞானம் படைத்தவர். தர்ம தேவதையின் அம்சமானவர். எல்லாவற்றுக்கும் மேலாக கிருஷ்ணரிடம் பெரும் மதிப்பும் பக்தியும் கொண்டவர்.

ஆனால், 'அரசாங்க விஷயத்தைப் பகிர்ந்து கொள்ளும் அளவுக்கு விதுரன் ஒன்றும் முக்கியத்துவம் வாய்ந்தவர் அல்ல!' என்று துரியோதனன் கருதினான் போலும். எனவேதான் கிருஷ்ணரின் வருகையைப் பற்றி அவரிடம் எதுவும் தெரிவிக்கவில்லை!

அஸ்தினாபுரத்துக்கு வந்து சேர்ந்தார் கிருஷ்ணர். அவரை மகிழ்ச்சியுடன்



ஆன்மிகமலர் ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

வரவேற்றார் பீஷ்மர். மிக்க அலங்காரத்துடன் திகழ்ந்தமாளிகையைக் கண்ட கிருஷ்ணர், ‘இது, யார் மாளிகை?’ என்று கேட்டார்.

”எனது மாளிகைதான். தங்களது வருகை யையட்டி அலங்கரித்துள்ளேன்!” என்றார் பீஷ்மர்.

இதைக் கேட்ட கிருஷ்ணர் எதுவும் பேசாமல், அங்கிருந்து மெள்ள நகர்ந்தார். வரவேற்க வந்த வர்கள் அவரைப் பின்தொடர்ந்தனர்.

அடுத்து ஒரு மாளிகை. இது, பீஷ்மரது மாளி கையை விட பிரமாண்டமாக இருந்தது.

”இந்த மாளிகை யாருக்கு?” மீண்டும் வினா எழுப்பினார் கிருஷ்ணர்.

உடனே துரோணர், ”இது என்னுடையது கிருஷ்ணா! இங்கே எல்லா வசதிகளும் உள்ளன! தாங்கள் தங்குவதற்காக ஏற்பாடு செய்துள்ளேன்” என்றார்.

அதனுள்ளும் செல்லாமல் நடையைத்தொடர்ந் தார் கிருஷ்ணர். அடுத்து தென்பட்டது துச்சா தனனின் மாளிகை. ”என் மாளிகையை தங்களுக்காக உல்லாசபுரியாகவே மாற் றியுள்ளேன்!” என்றான் துச்சாதனன்.

அவன் சொன்னதை கிருஷ்ணர் தன் காதிலேயே வாங்கவில்லை. மாளிகைகளின் ஆடம்பரமும் ‘என்னுடையது என்மாளிகை’ என்ற அவர்களது வார்த்தை களில் தொனித்த கர்வமும் கிருஷ் ணருக்கு அறவே பிடிக்கவில்லை.

அங்கிருந்தும் அகன்றவர், தான் செல்லும் வழியில் சிறிய குடிசை ஒன்றைக் கண்டார்.

”அட! இந்தக் குடிசை அழ காக இருக்கிறதே இதன் உரி மையாளர் யார்?” என்று கேட் டார்.

அதற்குள் அரவம் கேட்டு வெளியில் வந்த விதுரன், கிருஷ்ணரைக் கண்டதும் முகம் மலர்ந்தார். ”இது உனது வீடு கிருஷ்ணா! உனது அருளால் அடியேன் இங்கு வசிக்கிறேன். இந்த இல்லத்தில் உன் திருப்பாதங்கள் பட, நான் புண் ணியம் செய்திருக்க வேண்டும். தயவுசெய்து உள்ளே வர வேண் டும்!” என்று கூறி, கிருஷ்ணரின் பாதங் களில் வீழ்ந்து வணங்கினார்.

கிருஷ்ணருக்கு எல்லையில்லா மகிழ்ச்சி. மிகுந்த உற்சாகத்துடன் அந்தக் குடிசைக்குள் நுழைந்தார். பரமாத்மா அமர்வதற்கு அங்கு தகுந்த ஆசனம் கூட இல்லை. தர்ப்பையால் ஆன பாயைத் தரையில் விரித்து, அதில் அமரும்படி வேண்டினார் விதுரன். அடுத்த கணம், எந்தத் தயக்கமும் இல்லாமல் அதில் ஆனந்தமாக அமர்ந்தார் கிருஷ் ணர்.

பிறகு, "என்ன விதுரா உங்களது வீடு தேடி வந்திருக்கிறேன். எனக்குப் பசிக்கிறது. சாப்பிட எதுவும் தர மாட்டீர்களா?” என்று உரிமையுடன் கேட்டார் கிருஷ்ணர்.

"காலையில் கஞ்சி மட்டுமே குடிப்பதுஅடியேன் வழக்கம். இன்றைக்கும் அவல் கஞ்சி உள்ளது. ஆனால், அதை எப்படித் தங்களுக்கு” தயங்கி னார் விதுரன்.

ஆனால், கிருஷ்ணர் குதூகலம் அடைந்தார்.

"அடடா! அவல் கஞ்சியா எனக்கு ரொம்பவே பிடிக்கும். கொடு விதுரா!” என்று முகம் நிறைய உற்சாகமானார் ஆவலுடன்.



உடனே விதுரன், ஒரு குவளையில் கஞ் சியை ஊற்றிக் கொண்டு வந்து கொடுக்க, அதை ரசித்துக் குடித்தார் கிருஷ்ணன். விதுரனின் கண்களில் நீர் பெருக் கெடுத்தது.

"என்ன விதுரரே? ஏன் உங்கள் விழிகளில்நீர் பெருக் கெடுக்கிறது?” என்று கேட்டார்கிருஷ்னர்.

”பரந்தாமா! உனக்கு, பாலும் தேனும் கலந்து சுவையான விருந்து படைக்க பீஷ்மர், துரோணர், திருதராஷ்டிரர் முதலானோர் காத்திருக்கிறார்கள். ஆனால் நீயோ, இந்த ஏழையின் குடிசையில் கஞ்சிக் குடிப்பதில் களிப்புறுகிறாயே..!” என்றார் விதுரன்.

அவரைப் பார்த்துப் புன்னகைத்த கிருஷ்ணர், "அவர்கள் ஆடம்பரப் பிரியர் கள். தங்களது அந்தஸ்தை வெளிப்படுத்துவதில் மட்டுமே குறியாக இருந்தனர். அவர் களது பேச்சில், ‘நான்’, ‘எனது’ என்ற அகந்தையே வெளிப்பட்டது.ஆனால் நீங்கள் மட்டுமே, ‘இது உனது இல்லம்’ என்று கூறி என்னைப் பெருமைப்படுத்தினீர்கள். தாங்கள் அன்புடன் சிறிய உத்தரணியில் தீர்த்தம்தந்தாலும் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள் வேன்!” என்று கூறி விதுரனை ஆசீர்வதித்துச்சென்றார்.

மாதம் தோறும் 2 புத்தகங்கள்




ஆன்மிக e-magazine

படியுங்கள் இலவசமாக

aanmeegamalar.com

ஆன்மிகமலர்.காம்

# தீயவைகளை பேசினால் தீய செயலாக மாறும் உதாரணமான மகிலா முகன்



வாரணாசியை ஆட்சி செய்த பிரம்ம தத்தரின் அமைச்சர் போதிசத்துவர்; கூர்மதி கொண்டவர்.

பிரம்ம தத்தரின் பட்டத்து யானை மகிலா முகன். இயல்பிலேயே மென்மையான குணம் கொண்ட மகிலா முகன், எல்லோரிடமும் அன்பாக பழகி வந்தது.

யானைக்கும் தேவை நல்லொழுக்கம்!ஒரு நாள்ஞ் நள்ளிரவில், திருடர்கள் சிலர் யானைக் கொட்டடி அருகே வந்து நின்று தங்களுக்குள் பேசிக் கொண்டனர்.

”நாம் இரக்கமற்றவர்களாக இருக்க வேண்டும். நமக்கு இடையூறு தருபவர்களை தயவுதாட்சண்யம் இன்றி கொல்ல வேண்டும்” என்ற அவர்களது பேச்சு, மகிலா முகனின் காதுகளிலும் விழுந்தது. இப்படி, திருடர்கள் யானைக் கொட்டடியில் பதுங்கி, தங்களுக்குள் பேசிக் கொள்வது அடுத்தடுத்த நாட்களும் தொடர்ந்தது.


தினமும், திருடர்களின் பேச்சைக் கேட்டு வந்த மகிலா முகன் யானை, ‘இவர்கள் நமக்காகவே போதிக்கின்றனர் போலும்!’ என்று எண்ணிக் கொண்டது.

ஒரு நாள், பாகன் ஒருவன் தன்னருகே வரஞ் அவனை துதிக்கையால் தூக்கி தரையில் அடித்துக் கொன்றது மகிலாமுகன். பாகனின் உறவினர்கள், பிரம்ம தத்தரிடம் வந்து முறையிட்டனர்.

மன்னருக்கு அதிர்ச்சி! ‘சாதுவாக இருந்த மகிலாமுகன், திடீரென்று முரட்டுத்தனமாக நடந்து கொள்வது ஏன்?’ என்று குழம்பினார். முடிவில், அமைச்சர் போதிசத்து வரை வரவழைத்த மன்னர், அவரிடம் நடந்ததை விவரித்து, தகுந்த தீர்வு காணும்படி பணித்தார்.

யானைக் கொட்டடிக்கு வந்த போதிசத்துவர் மகிலா முகன் யானையைக் கூர்ந்து கவனித்தார். வியாதிக்குரிய அடையாளம் எதுவும் தென்படவில்லை.

உடனே அங்கிருந்த பாகர்களிடம், ”இங்கே



புதிய ஆசாமிகள் எவரும் வந்தார்களா?'' என்று கேட்டார்.

அவர்கள், ''ஆமாம் ஐயா! சில தினங்களாக நள்ளிரவில் சிலர், கொட்டடிக்கு அருகே நின்று பேசிக் கொண்டிருந்தனர்!'' என்றார்கள்.

'நள்ளிரவில் கூடுபவர்கள் தீயவர்களாகவே இருக்க வேண்டும்!' என்று எண்ணிய போதி சத்துவர், மன்னரிடம் விவரங்களைக் கூறினார்.

அத்துடன், ''ஒழுக்கத்தில் சிறந்த சான்றோர்களை வரவழைத்து, கொட்டடிக்கு அருகில் அமர்ந்து நல்ல விஷயங்களைப் பற்றி பேசச் சொல்லலாம்!'' என்றார். மன்னரும் சம்மதித்தார்.

அதன்படி நல்லோர்களும் அந்தணர்களும் யானைக் கொட்டடியில் கூடிப் பேசுவதற்கு ஏற்பாடுகள் செய்யப் பட்டன. நாள்தோறும் அவர்கள் நன்னடத்தைகள் நீதிநெறிகள் பற்றி உரையாடினர்.

'எவரையும் துன்புறுத்தவோ, கொல்லவோ கூடாது. எல்லோரிடமும் அன்புடன் பழக வேண்டும்' என்பன போன்ற அவர்களது பேச்சுகளும் மகிலாமுகன் யானை யின் காதில் விழுந்தன. 'நமக்காகவே போதிக்கின்றனர்' என்று கருதிய யானை, படிப்படியாக பழைய நிலைக்குத் திரும்பியது. மன்னருக்கு ஆச்சரியம்! ''யானை மாறியது ஏன்? அது, பழைய நிலைக்குத் திரும்பியது எப்படி?'' என்று போதிசத்துவரிடமே கேட்டார்.

''அரசே! எப்போதும் எல்லோரும் நல்ல கருத்துகளையே பேச வேண்டும் என்று பெரியோர் கூறுவது இதற்காகவே! திருடர்களது தீய பேச்சுகளைக் கேட்ட யானை, அவற்றை ஏற்று அவ்விதமே செயல்பட்டது. பிறகு அந்தணர்களது நல்லுரைகளைக் கேட்டு, சாதுவாகவும் அன்பாகவும் மாறிவிட்டது'' என்று விளக்கினார் போதி சத்துவர்.

ஆன்மிகம் • தத்துவம் • உடல்நலம் • பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்

# லக்ஷ்மி நரசிம்ம ஜெயந்தி உற்சவம்









சென்னை அடையாறில் உள்ள அனந்த பத்மநாபசுவாமி கோயிலில் மே 13 மற்றும் 14ம் தேதிகளில், 27வது லக்ஷ்மி நரசிம்ம ஜெயந்தி உற்சவம் நடைபெற்றது.

விசாகீர்தலி அறக்கட்டளையின் ஏற்பாட்டில் இந்நிகழ்வு வெகு சிறப்பாக நடைபெற்றது. 1969–ஆம் ஆண்டு V.P.சாஸ்திரிகளால் இந்த அறக்கட்டளை நிறுவப்பட்டது.

தற்போது அதன் நிர்வாக அறங்காவலராக சங்கர் பாகவதரின் தலைமையின் நிர்வகிக்கப்படுகிறது. ஸ்ரீ ரகுராமன், ஸ்ரீ ராமசேஷன், ஸ்ரீ வி எம் சுந்தரம் மற்றும் ஸ்ரீ கணேசன் சுந்தரம் ஆகியோர் அதன் மற்ற அறங்காவலர்களாக உள்ளனர்.

பம்பாய் ஸ்ரீ சத்யா, திருவிசநல்லூர் ராமகிருஷ்ணன், புதுக்கோட்டை விக்னேஷ், புதுக்கோட்டை நரசிம்மன் ஆகிய பாகவதர்களின் பங்களிப்புடன் இந் நிகழ்வு நடைபெற்றது.

தில்லி சங்கர் பாகவதரின் சம்பிர தாய சீதா கல்யாணம் மற்றும் லக்ஷ்மி ந்ருசிம்ம கல்யாணத்துடன் நிகழ்ச்சி நிறைவு பெற்றது. தமிழகம் முழுவதும் சிதிலமடைந்த கோயில்களுக்கு புத்துயிர் அளிப்பதில் அவர் ஆற்றிய அளப்பரிய சேவையை அங்கீகரித்து, அறக்கட்டளை அண்ணாமலையார் அறப்பணிக் குழுவின் சார்பில் கவுரவிக்கப்பட்டது.

அடையாறு பிரக்ருதி உம்மிடி பங்காரு ஸ்டோரின் எம்.டி., பிரசாந்த், இந்நிகழ்விற்கு தலைமை விருந்தினராகக் கலந்து கொண்டு கௌரவித்தார்.

உற்சவத்தில் டாக்டர் என் ரகு, இயக்குனர் டிடி பொதிகை, ஸ்ரீமுஷ்ணம் ஸ்ரீ ராஜா ராவ், தஞ் சாவூர் ஸ்ரீ தியாகராஜ பாகவதர், கடலூர் ஸ்ரீ கோபி பாகவதர் மற்றும் ஸ்ரீ மகாதேவன் பாகவதர் உள்ளிட்ட பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

அனைத்து பக்தர்களுக்கும் அன்ன தானம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.



எஸ்.வெங்கடேசன்

கடந்த காலங்களில், அறக் கட்டளை ஜே.சாய் தீபக் (வழக் கறிஞர், உச்ச நீதிமன்றம்) "தர்ம சம்ர க்ஷனா கைங்கர்ய ரத்னம்" என்ற பட்டத்தையும், இண்டிக் கலெக்டிவ் டிரஸ்ட் "ஆலய சம்ர க்ஷன கைங்கர்ய ரத்னம்" மற்றும் "நாமசங்கீர்த்தன கைங்கர்ய ரத்னம்" என்ற பட்டத்தையும் புதுக்கோட்டை நரசிம்மன் பாகவதருக்கு வழங்கியது.

– எஸ்.வெங்கடேசன்,
நொய்டா தொடர்பு எண்: 9811161370

ஆன்மிகமலர்
மெயில் புக்




# இதுவரை வெளிவந்த அனைத்து இதழ்களையும் எந்தவித கட்டணமின்றி முற்றிலும் இலவசமாக படிக்க










## aanmeegamalar.com

## இணையதளத்தை

## பார்க்கவும்









# உத்தம நூலில் கலியுகத்தின் கணிப்புகள்



நம் ரிஷிகளும் முனிவர்களும் எதிர்காலத்தில் நடக்கவிருப்பதை முன்கூட்டியே அறிந்திருந்தனர். இது அவர்களின் அதீத அறிவாற்றலினால் அவர்கள் கண்டறிந்த உண்மைகள். பாகவத புராணத்தின் இறுதி பாகத்தில் கலியுகத்தைப் பற்றிய சில அரிய தகவல்கள் நிறைந்துள்ளன. 5,000 ஆண்டுகளுக்கு முன் வேதவியாசர் அருளிய ஓர் உத்தம நூலில் கலியுகத்தைப் பற்றிய குறிப்புகள் அத்தனையும் மிகப் பொருத்தமாக அமைந்துள்ளது. இது மிகவும் வியக்கத்தக்கஒன்றாகும். கீழே உள்ள கணிப்புகளின் படி தற்போது நடைபெற்று வருவது இந்த நூலின் மகத்துவத்தை தெரிவிப்பதாகஉள்ளது.

❖❖❖

கலியுகத்தின் தாக்கத்தால் அறநெறி, உண்மை,தூய்மை, பொறுமை, கருணை, ஆயுள் காலம், உடல் வலிமை, ஞாபகசக்தி ஆகிய அனைத்தும் மனிதர்களிடையே நாளுக்கு நாள் குறைந்து கொண்டே வரும். [பாகவத புராணம் 12.2.1]

❖❖❖

கலியுகத்தில், பொருட்செல்வம் மட்டுமே ஒரு மனிதனின் மதிப்பை அளவிடும். மற்றபடி ஒருவனின் முறையான பழக்கவழக்கங்கள்மற்றும் நல்ல பண்புகள் அடிப்படையில் அவன் மதிப்பிடப்படுவதில்லை. மேலும், சட்டமும் நீதியும் ஒருவனின் அதிகாரத்தின் அடிப்படையிலே செயல்படும். [பாகவத புராணம் 12.2.2]

❖❖❖

> “அலங்காரம் செய்தவனெல்லாம் அழகானவன் என்றறியப்படுவான். முரட்டுத்தனமான பேச்சு உண்மை என்று எளிதில் நம்பப்படும். வயிற்றை நிரப்புவது மட்டுமே வாழ்க்கையின் குறிக்கோளாக அமையும். பல மதங்கள் ஆட்களை சேர்த்துக் கொள்வதையும் பெருக்கிக் கொள்வதையும் மட்டுமே லட்சியமாக கொண்டிருக்கும்.”

கணவன் மனைவி உறவு என்பது வெறும் உடலுறவுக்காக மட்டுமின்றி, அது ஒரு மிக உன்னதமான பந்தம். ஆணும் பெண்ணும் சமம், இருவரும் தங்களின் குடும்பத்தை முறையாக வழிநடத்தவேண்டும். பெண்ணை மதிப்பதால் தான் ஒருவன் ஆணாகிறான்; ஆணை மதிப்பதால் தான் ஒருவள் பெண்ஆகிறாள். பிராமணன் என்பவன் நற் குணங்களாலும் தர்மசெயல்களாலும் உருவாகிறானே தவிர பூணூல் அணிவதால் அல்ல. சமூகத்தில் வேண்டுமென்றால் பூணூல் அணிந்துகொண்டு தன்னை உயர்ந்தவன் என்று காட்டிக் கொள்ளலாம். ஆனால், பகவானின் முன்னிலையில் எல்லாவுயிர்களும் சம்மே! (சர்வபூதேஷு சமஹ்கீதை)

ஆனால், கலியுகத்தில் சில ஆண்களும் பெண்களும் வெறும் உடலுறவுக்காக மட்டுமே தொடர்பு கொண்டிருப்பார்கள். தொழில்துறைகளில் வெற்றி




என்பது வஞ்சகமும் சூழ்ச்சியும் நிறைந்திருக்கும். பூணூல் அணிந்திருப்பதால் மட்டுமே ஒருவன் பிராமணன் என்றழைக்கப்படுவான். [பாகவத புராணம் 12.2.3]

❖❖❖

ஒருவரின் புறத்தோற்றத்தை மட்டுமே அடிப் படையாக கொண்டு அவரை பண்டிதர் என்று மக்கள் நம்புவார்கள். கண்களால் காணும் வித் தைகளுக்கு மயங்கி தவறான போலி குருக்களை நம்பி வழிதவறி செல்வார்கள். வெறும் வாய் வார்த்தைகளில் ஜாலங்கள் செய்பவர் கற்று ணர்ந்த பண்டிதராக போற்றப்படுவார். [பாகவத புராணம் 12.2.4]

❖❖❖

கலியுகத்தின் பிடியில் சிக்கியிருக்கும் சிலர் பொருட்செல்வம் (பணம்) இல்லாதவனைத்தீண்டத் தகாதவன் என்று வெறுத்து ஒதுக் குவர். குளிப்பதாலும் அலங்காரம் செய்து கொள்வதாலும் மட்டுமே ஒருவன் சுத்தமடைந்து விட்டான் என எண்ணிக் கொள்வான். [பாகவத புராணம் 12.2.5]

❖❖❖

அலங்காரம் செய்தவனெல்லாம் அழகானவன் என்றறியப்படுவான். முரட்டுத்தனமான பேச்சு உண்மை என்று எளிதில் நம்பப்படும். வயிற்றை நிரப்புவது மட்டுமே வாழ்க்கையின் குறிக்கோளாக அமையும். பல மதங்கள் ஆட்களை சேர்த்துக் கொள்வதையும் பெருக்கிக் கொள்வதையும் மட்டுமே லட்சியமாக கொண்டிருக்கும். [பாகவத புராணம் 12.2.6]

❖❖❖

உலகத்தில் ஊழல் நிறைந்த அரசியல்வாதிகள் நிறைந்துவிடுவர். தன் சமூகத்தினிடையே தன் னை பலமானவன் என்று காட்டிக்கொள்பவன் அரசாளும் அதிகாரத்தைப் பெற்றிடுவான். [பாக வத புராணம் 12.2.7]

❖❖❖

ஊழல் நிறைந்த அரசாங்கத்தால் நியாய மற்ற கொடுமையான வரிகள் மக்கள் மீது வசூலிக் கப்படும். இதனால் மக்கள் உண்ண உணவின்றி இலை, வேர், விதை போன்ற வற்றை உண்ணத் தொடங்குவார்கள். (அரசின் அலட்சியப் போக் கினால்) கடுமையான பருவநிலை மாற்றத்திற்கு ஆளாகி துன்பமிகு வாழ்க்கையில் சிக்கிக்

கொள்வார்கள். [பாகவத புராணம் 12.2.9]

❖❖❖

கடுங்குளிர், புயல், கடும்வெப்பம், கனமழை, உறைபனி, வெள்ளம் போன்ற பல இயற்கை பேரிடர்களில் சிக்கி மக்கள் தவிப்பார்கள். இதனால் பசி, தாகம், நோய், பயம், சச்சரவு போன்ற கடுந்துன்பங்களிலும் சிக்கிக் கொள்வார்கள். [பாகவத புராணம் 12.2.10]

❖❖❖

கலியுகத்தின் கொடுமை அதிகரிக்கையில், மனிதர்களின் சராசரி ஆயுள்காலம் 50 ஆண்டுகளாக குறையும். [பாகவத புராணம் 12.2.11]

❖❖❖

தன்னை ஊட்டி வளர்த்த பெற்றோர்களை இறுதிகாலத்தில் கவனித்துக் கொள்ளும் தர்மத்தை மகன் மறப்பான். [பாகவத புராணம் 12.3.42]

❖❖❖

பொருளுக்காக மனிதன் இன்னொருமனிதனிடம் வெறுப்பு, பொறாமை போன்ற உணர்ச்சிகளை வளர்த்துக் கொள்வான். நட்பு என்ற உயரிய பண்பை போற்றாமல், தன் சுற்றத்தாரையும் உறவினரையும் கூட கொல்லத் துணிவான். [பாகவத புராணம் 12.3.41]

❖❖❖

ஆன்மிகமலர்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!! .com

வெறும் பகட்டுக்காகவும் புகழுக்காகவும் மட்டுமே தானம் அளிப்பார்கள். தற்பெருமைக்காக மட்டுமே நோன்பு இருப்பார்கள். தர்மத்தைப் பற்றிய அறிவாற்றல் இல்லாதவர்கள் மதங்களை உருவாக்கி மக்களைக் கவர்ந்து தவறான அதர்ம பாதைக்கு இழுத்துச் செல்வார்கள். [பாகவத புராணம் 12.3.38]

❖❖❖

தனக்கு இனி பயன்பட மாட்டான் என்ற பட்சத்தில் தனக்கு இத்தனை காலமாக உழைத்து தந்த தொழிலாளிகளை முதலாளி கைவிடுவான். இத்தனை காலம் பால் கொடுத்த பசு பால் கொடுப்பது குறைந்துவிட்டால் அப்பசுக்களும் கொல்லப்படும். நன்றிகடன் மறக்கப்படும். [பாகவத புராணம் 12.3.36]

❖❖❖

நகரங்களில் கொள்ளையர்கள் அதிகரிப்பர்; வேதங்கள் கயவர்களால் தங்கள் சுயநல கோட்பாடுகளைப் பரப்ப பொய்யான முறையில் மொழிப்பெயர்க்கப்படும். அரசியல்வாதிகள் மக்களை மெல்லமெல்ல பலவிதமாக கொடுமை செய்வார்கள். போலி ஆசாரியர்கள் தோன்றி பக்தர்களை உபயோகப்படுத்தி தங்கள் வயிறுகளையும் காமத்தையும் பூர்த்தி செய்து கொள்வார்கள். [பாகவத புராணம் 12.3.32]

அழகிய வடிவமைப்பில்
வார இதழ்கள்,
மாத இதழ்கள்,
பப்ளிகேஷன்ஸ்
புக் ஓர்க்,
அட்டைப்பட
வடிவமைப்பு,
நாளிதழ்கள்,
போன்றவை
தரமாகவும்
குறைந்த செலவில்
செய்துதரப்படும்
SML Graphics
Sree Maha Laksmi Graphics
செல்: +91-9444228203

கட்டாய சந்தா இல்லை!

சப்ஸ்கிரைப் இல்லை!!

மாற்று மத திணிப்பு இல்லை!!!

தரம் மட்டுமே
நமது இதழின் தாரகமந்திரம்,
வியாபார நோக்கத்துடன் செயல்படும்
மற்ற ஆன்மிக இதழுக்கிடையே
சேவையை மட்டுமே நோக்கமாக
கொண்ட ஒரே தரமான
ஆன்மிக இதழ்

ஆன்மிகமலர்.காம் வழங்கும்
ஆன்மிகமலர் மெயில் புத்தகம்
ஒரே கிளிக் 160 இதழ்களையும்
டவுன்லோடு செய்து படியுங்கள்

மேலும் விபரங்களுக்கு
aanmeegamalar.com இணையதளத்தை பாருங்கள்

# ராஜ மந்திரம் போற்றும்

# ராஜ கிரகம்!

கண்ணுக்கு நேராக தெரிகின்ற கடவுளாகிய சூரிய பகவானை வழிபடுகின்ற மக்கள் ஒரு காலத்தில் உலக முழுவதும் பரவி இருந்தார்கள்.

நமது பாரத நாட்டில் சூரியனை வழிபடாத மக்களே இல்லை என்று சொல்லுகின்ற அளவிற்கு சௌர மத பிரிவு மிகுந்த செல்வாக்கை ஆறாம் நூற்றாண்டு வரை பெற்று இருந்ததாக சில ஆய்வுகள் சொல்கின்றன சூரிய கடவுளுக்கான தனிகோயில்கள் ராஜஸ்தான், கூர்ஜரம், காஷ்மீர், வங்காளதேசம், தமிழ்நாடு போன்ற பகுதிகளில் பரவலாக இருந்திருக்கின்றன.

அவற்றில் அன்னியர் படையெடுப்பால் பல அழிந்து விட்டாலும் ஒருசில இன்றும் உயிரோடு இருந்து சூரிய வழிபாட்டின் சிறப்புகளை கல்லில் வடித்த எழுத்துக்களாக நமக்கு காட்டி நிற்கின்றன.

உலகத்தின் உயிராகஇருக்கும் சூரியனுடைய வழிபாடு இப்போது தான் ஏற்பட்டது என்று கால அளவு வைத்து சொல்லிவிட முடியாது.

கால கணிதங்களுக்குஅகப்படாத காலம் தொட்டேசூரியனை மக்கள் வழிபட்டு வந்தார்கள். சர்வ வியாபியாகவும் சர்வசாட்சி யாகவும் அஞ்ஞான இருட்டை போக்குவதாகவும் கால தேச பருவ சூழலால் பாதிக்க படாததாகவும் நிற்பது சூரியன் இறைவனுடைய பரதத்துவத்தை விளக்குவதற்கு கண்ணுக்கு தெரியும் பொருளாக இருப்பது சூரியனாகும். அதனால் இது தான் மனிதனின் முதல் உபாசனையாக இருந்திருக்க வேண்டும் என்ற முடிவிற்கு வந்தால் கூட அது தவறல்ல என்று தோன்றுகிறது.

மனிதகுலம் சூரிய தேவனை எப்படியெல்லாம் ஆராதனை செய்கிறது என்பதை நான்கு வேதங்களிலும் மிக தெளிவாக காண முடிகிறது.

அறிவுடைய மனிதனின் முதல்சிந்தனை தொகுப்பான ரிக் வேதம்சூரியனைமூன்று வித அக்னிகளில் ஒருவனாக புகழ்கிறது. உதய

www.aanmeegamalar.com

ஆன்மிகமலர் ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம் .காம்



ஜோதி என்ற பெயர் கொடுத்து ரிக் வேதம் சூரியனை வழிபடுவதை பார்த்தால் மனதில் நிச்சயம் சிலிர்ப்பு ஏற்படும். யஜூர் வேதம் ஜோதியை உண்டாக்குபவன் என்றும் சகல உலகங்களையும் ஒளிபெற செய்பவன் என்றும் சூரியனை கொண்டாடுகிறது.

அருண கடாகம் என்ற தனி பகுதியை சூரியனை பற்றி யஜுர் வேதத்தில் இருக்கிறது. இசையின் வடிவான சாம வேதம் உலகம் முழுவதும் ஒளிர்பவன் என்ற சிறப்பு பெயரை சூரியனுக்கு தருகிறது. இறைவனின் கண் என்றே அதர்வண வேதம் சூரியனை போற்றுகிறது.

சதபத பிராமணம் சூரியனை ஜோதி பிழம்பு என்றும் பொன் ஆரங்களான வட்டங்களை உடையவன் என்றும் போற்றுகிறது. இது தவிர பவிஷ்ய புராணம், பிரம்ம புராணம், வராக புராணம், மச்ச புராணம்,அக்னி புராணம், கருட புராணம், பவிஷ்யோத்ர புராணம், காளிகா புராணம், மார்கேண்டைய புராணம் ஆகிய பழம் பெரும் புராண நூல்கள் சூரியனின் சிறப்புகளை வரலாற்றை நமக்கு மிக தெளிவாக காட்டுகிறது.

இதுமட்டும் அல்ல உலகத்தை காத்து ரச்சிக்கும் முழுமுதலான கடவுள் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா தமது திருவாய் மலர்ந்தருளிய பகவத் கீதையில் வேத சாஸ்திரத்தில் நான் சாம வேத மாகவும், பிரகாசிக்கும் பொருட்களில் நான் சூரியனாகவும் இருக்கிறேன் என்று அழகுபட சொல்கிறார்.

மந்திரங்களில் தலைசிறந்தது என்றும் ராஜ மந்திரம் என்றும் சொல்லபடுவது காயத்திரி மந்திரமாகும் இந்த மந்திரத்தைபிரபஞ்ச வெளி யில் இருந்து கண்டறிந்து உலக மக்களுக்கு தந்தவர் விஸ்வாமித்ர மகரிஷி இந்த காயத்திரி மந்திரம் சூரியனை உபாசனை செய்கிறது என்பது அனைவரும் அறிந்த செய்தி.

“ஓம் பூர் புவஹ ஸ்வஹ
ஓம் தத் ஸவிதுர் வரேண்யம்
பர்கோ தேவஸ்ய தீமகி
த்யோ யோநஹ ப்ரசோதயாத்”

என்ற இந்த காயத்திரி மந்திரத்தின் பொருள் எந்த தேவன் உலகத்தில் உள்ள இருட்டை நீக்கி வெளிச்சத்தை தருகிறானோ ஒளியை பரப்புகிறானோ அவன் நமது புத்தியை பிரகாசிக்க செய்யட்டும் என்பதே ஆகும். இதை



அப்பர் சுவாமிகள் மிக இனிமையான தமிழ் நடையிலும் நமக்கு தருகிறார்.

அருக்கன் பாதம் வணங்குவார் அந்தியில்
அருக்கன் ஆவான் அரனுரு வல்லானோ
இருக்கு நான்மறை ஈசனையே தொழும்
கருத்தினை நினையார் கண்மனவரே

என்று சூரிய வழிபாட்டின் பெருமையை நம்மை போன்ற சாதாரண மனிதரும் அறியும் படி செய்கிறார். வராகமிகிரர் என்ற புகழ்பெற்ற இந்திய வானியல் சாஸ்திரி தாம் எழுதிய ப்ருஹத் சம்ஹிதை என்ற நூலில் சூரியனுக்கு காலில் இருந்து தொடை வரை கவசமும் கரங்களில் தாமரை மலரும் தலையில் மகுடமும் காதில் குண்டலமும் இடுப்பு கச்சும்

புன்முறுவல் பூத்த வாயும் பிரசன்ன முகமும் குருதி சிவப்பான வட்டத்திற்குள் அடங்கிய வடிவமாகவும் சூரியனின் சிற்பம் செதுக்கப்பட வேண்டும் என்று கூறி ஆதிகால சூரிய தேவனின் வழிபாட்டு உருவத்தை நமக்கு தெளிவுபடுத்தி விடுகிறார்.

தமிழ் இலக்கியங்களும் சூரிய பகவானை விட்டு வைக்கவில்லை தமிழ் புலவர்களின் அழகிய கற்பனைக்கும் தத்துவ மோகத்திற்கும் சூரியன் பல கொடைகளை வாரி வழங்கி இருக்கிறன். நமது புலவர்களின் செந்தமிழ் விருந்தில் சூரிய சித்திரம் வடித்து காட்ட படுவதை மனகண்ணில் பார்க்கும் போது கொலைகாரனுக்கு கூட ஆன்மிக சிந்தனை ஊற்றெடுத்து பெருகி விடும்.

பேராழி உலகனைத்தும் அகல இருள் நீங்க ஏறாழி தனை நடத்தும் ஒளிசுடர் பரவுதுமே என்றும் ஒருகால் தேர்ச்செல்வன் என்றும் ஏழு குதிரைகள் பூட்டிய ஒரு சக்கரமே கொண்ட தேரில் பவனி வரும் நாயகன் என்றும் சூரியன் பலவாறு போற்ற படுகிறான்.

ஆலய நெறிமுறைகளையும் ஆன்மீக கோட் பாடுகளையும் தெளிவாக விளக்கும் ஆகம நூல்களில் சூரிய மண்டலத்தில் நடுநாயகமாக இறைவனாகிய சிவபெருமான் இருக்கிறான் என்றும் இதனால் சூரியன் சிவ சூரியன் என்ற சிறப்பு பெயரை பெறுகிறான் என்றும் கூறப் பட்டிருக்கிறது.

மேலும் சிவபெருமானின் அஷ்ட மூர்த்திகளில் சூரியனும் ஒருவன் அவனே சிவனாரின் வலது கண்ணாக திகழ்கிறான் என்றும் ஆகமங்கள் சூரியனை பக்தர்களுக்கு அறிமுகம் செய்து வைக்கிறது.

ஆதிகாலத்தில் சூரிய வழி பாடு மந்திர வழிபாடாகவே இருந் தது. ஆகமங்கள் சூரியனைபஞ் சாயதன பூஜை முறையில் வழி பாடு செய்யும் மார்க்கத்தை மிக விரிவாக பேசுகின்றன.

அதுமட்டும் அல்ல சூரியனுக்கான தனி யந்திர வழிபாட்டையும் ஆக மங்கள் வலியுறுத்துகின்றன. கங்கை கொண்ட சோழபுரத்து சிவாலயத்தில் கல்லில் ஒருகமல யந்திரம் வடிவமைக்கபட்டுள்ளது. இந்த யந்திரத்தில் சூரியனின் உதயகோலம் மிக அழகாக சித்தரிக்கப்பட்டுள்ளது.

சிலை வழிபாடுகள் மந்திர வழிபாடுகள் யந்திர வழிபாடு கள் இவைகளையும் தாண்டி சூரியன் மக்கள் மத்தியில் ஜோதிட ரீதியாக வணங்கப்படும் மிக முக்கிய தெய்வமாக கருத பட்டான்.

இந்திய ஜோதிட சாஸ்திரம் சிம்ம ராசிக்குரிய கிரகமாக சூரியனை காட்டுகிறது. கிரகங்களில் நடுநாயகமாக சூரியன் கருதபடுவதோடு அவனே நவக்ரகங்களில் நாயகனாக இருக்கிறான். ஒரு ஜாதகத்தில் முன்னோர்களின் தலைவனாகவும் ஆயுளை கொடுப்பவனாகவும் ஆரோக்கியத்தை காப்பவனாகவும் சூரியன் இருக்கிறான்.

ஜோதிட சாஸ்திரம் சூரியனை சத்வ குணம் நிரம்பியவன் என்று சொல்கிறது. கோதுமை தானியம் அவனுக்கு மிகவும் பிடித்தது என்றும் மனித சரீரத்தில் பித்தத்தை ஏற்படுத்துபவன் என்றும் சொல்லபடுகிறது.

சூரியன் மாதம் ஒரு ராசியில் அமர்கிறான் அவன் வருடத்தில் ஒருமுறை மகர ராசிக்கு வருகை தருவதை சங்கராந்தி என்றும் பொங்கல் திருநாள் என்றும் இந்திய மக்கள் கொண்டாடுகிறார்கள்.

சூரியன் ஆண்டு தோறும் ஆடி மற்றும் தை மாதங்களில் உத்தராயணம் தட்சணாயணம் என்ற இரண்டு பகுதிகளுக்கு மாறுவதை மகா புண்ய காலமாக இந்துக்கள் கொண்டாடி மகிழ்கிறார்கள்.

இந்த காலங்களில் சூரியனின் பார்வை தெற்கில் இருந்து வடக்கேயும் வடக்கே இருந்து தெற்கேயும் மாறு படுகின்றது.



யோகி
ஸ்ரீ ராமானந்த குரு

இதனால் உலகின் பருவ கலங்களும் முறைப்படி மாறி மாறி வந்தமைகின்றன. மழை வருவதும் வெயில் அடிப்பதும் பனி பொழி வதும் சூரிய மாற்றத்தினாலே என்பதை நாம் அறிவோம். உலகின் போக்கையே தனது கட்டுபாட்டுக்குள் வைத்திருக்கும் சூரிய வழிபாடு எங்கெங்கு இருந்தன என்பதை அடுத்த பகுதில் சிந்திப்போம்.

யோகி ஸ்ரீ ராமானந்த குரு
போன்: 09442426434

www.aanmeegamalar.com

# வாலாஜாபேட்டை ஸ்ரீகுபேரவீர ஆஞ்சநேயர் திருக்கோவிலில் சிறப்பாக நடைபெற்ற

# கும்பாபிஷேக விழா





ராணிபேட்டை மாவட்டம் வாலாஜாபேட்டையில் காமாட்சி புரத்தில் குபேரதிசையில் உள்ளஸ்ரீகுபேர வீர ஆஞ்சநேயர் திருக்கோவில் திருப் பணிகள் முடிக்கபட்டு மே மாதம் 17–ந் தேதி முதல் 22–ந் தேதி வரை மகாகும்பாபிஷேகம் விழா நடை பெற்றது.

பக்தர்களால் நவகிரககோட்டை என சிறப்புப் பெயருடன் அழைக்கப்படும் இத்திருக்கோவில், நினைத்ததை நிறைவேற்றும் பிரார்த்தனை கோவிலாக பக்தர்களால் வணங்கபட்டு வருகிறது. எழில்மிகு கலைவேலைபாடுகளுடன் ஆஞ்சநேயர் சுதை வேலைபாடுகள் தத்ரூபமாக உள்ளது.

இத்திருக்கோவில் 2,500 ஆண்டுகால பழ மையான குபேர ஆஞ்ச நேயர் கோயிலாகும். கடந்த மே மாதம் 22–ந்தேதி காலை 9மணிக்கு மஹாபூர்ணாஹுதி பூஜையும் அதைதொடர்ந்து கோபுரம் மஹாகும்பாபிஷேகம் பரிவார தெய்வங் கள் மற்றும் மூலஸ்தான மஹா அபிஷேகம்நடைபெற் றது.

கும்பாபிஷேக விழாவில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர்.

மந்திரங்கள் ஓதி கோவில் விமான கோபுரம் கலசம் மற்றும் ஸ்ரீசக்கரம் மீது புனித நீர் ஊற்றப்பட்டு மகா கும்பாபிஷேகம் ஜொலிக்கும் படி மின்விளக்குகள் அமைக்கப்பட்டிருந்தது.

இக்கோ யிலில் உள்ள ஆஞ்சநேயர் மிகவும் சக்தி வாய்ந்ததாக போற்றப்படுகிறது. இந்நி லையில் இந்த கோயிலுக்கு குருஜி ராஜேஷ் சிவம் தலைமையில் திருப்பணிகள் செய்யப்பட்டது.

மேலும் இங்குள்ள திருக்குளம் புதுப்பிக்கப் பட்டு குளத்தை சுற்றி தசாவதார சிலைகள் பொருத்தப்பட்டுள்ளன.

மேலும் கோவிலின் முதல் தளத்தில் காஞ்சி காமாட்சி அம்மன் சன்னதி உள்ளது. கோண சக்கரத்தில் அமர்ந்த நிலையில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது, மிகப்பெரிய தியான மண்டபம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், அதற்கான கும்பாபிஷேகம் வாலாஜா தன்வந்திரி ஆரோக்கிய பீடாதிபதி முரளிதர சுவாமிகள் தலைமையில் விமரிசையாக நடைபெற்றது. முன்னதாக யாக சாலையில் அமைத்து, அதில், பல்வேறு நதிகளில் இருந்து கொண்டு வந்த புனித நீர் கொண்டு வந்து கும்ப கலசங்களில் அபிஷேகம் செய்யப்பட்டது.

திரளான பக்தர்கள் கலந்து கொண்டுசுவாமி தரிசனம் செய்தனர். மகாலட்சுமி யாகம் மற்றும் 108 சுமங்கலி பூஜை யுடன் பக்தி சொற்பொழிவு நடைபெற்றது. விழா ஏற்பாடுகளை கோவில் குருஜி ராஜீவ் சிவம் மேற்பார்வையில் ஸ்ரீகுபேரவீர வீர ஆஞ்சநேயர் கோவில் ராஜீவ் சிவம் சேவா





டிரஸ்ட் கும்பாபிஷேக கைங்கர்யம் குழுவினர் செய்து இருந்தனர்.

ஸ்ரீ இராமபக்தரான ஆஞ்சநேயரின் பிறப்பே அபூர்வ மானது. அனுமனின் லீலைகளும் அவர் புரிந்த அற்புதங் களும் சொல்லில் அடங்காதவை. இராம நாமம் ஜெபிப்ப வர்களுக்கு என்றும் உறு துணையாக இருந்து அவர்களது துயரங்களைப் போக்குவதில் அனுமரை விடவும் சிறந்தவர் எவரும் கிடையாது.

அப்பேர்ப்பட்ட அஞ்சனை மைந்தனான ஸ்ரீ ஆஞ்சநேயர் இந்த மண்ணுலகில் எண்ணற்ற திருத்தலங்களில் மாறு பட்ட கோலங்களில் எழுந்து, ஸ்ரீஇராம பக்தர்களின் நெஞ்சில் நீங்கா இடம் பிடித்துள்ளார்.

அவ்வகையில் இராணிப்பேட்டை மாவட்டம், வாலாஜா பேட்டை நகரின் கிழக்கு மேற்கு வட க்கு தெற்கு என நான்கு திசைகளிலும் கோவில் கொண்டெழுந்து அருள்பாலித்து வருகின்றார்.

அவற்றுள் நகரின் வடக்குதிசையில் ஸ்ரீகாமாட்சி புரத்தில் எழுந்தருளும் அனுமன் மிகவும்பிரசித்தம். வடக்கு திசையான குபேர திசையில் இவர் கோயில் கொண்டிருப்பதால் பக்தர்களால் இவர் ஸ்ரீ குபேர வீர ஆஞ்சநேயர் என்று அழைக்கப் படுகின்றார்.

ஆதியில் அகத்தியர் ஸ்தாபித்த சிவாலயம் இங்கு இருப்பது சிறப்பு. முன்னொரு காலத்தில் இந்தப் பகுதியில் வாழ்ந்த பலர் பலவித நோய் களால் அவதியுற்றனர்.

அப்போது ஆற்காட்டை சுற்றி வாழ்ந்தமகான் கள் சிலரது சிந்தனைக்கு எட்டியது இந்தத் தகவல். அவர்களது ஆலோசனைப்படி வாலாஜா பேட்டையில் நான்கு திசைகளிலும் நான்கு ஆஞ் சநேயர் ஆலயங்கள் ஸ்தாபிக்கப்பட்டு, பூஜைகள் நடத்தப்பட்டது.

இதன்பின் பலரது வியாதிகள் நிவர்த்தி அடைந் துள்ளது. இன்றும் இந்த நிகழ்வை பலர் நினைவு கூறுவது அஞ்சனை மைந்தருக்கே வெற்றி. சுமார் 1000 வருடங்கள் பழமை வாய்ந்த இந்த ஆஞ்சநேயர் பூமியில் இருந்து கிடைக்கப் பெற்றவர்.

தனது இடது கரத்தை இடுப்பில் ஊன்றியவாறு கதாயுதத்துடன் வலது கரத்தை மேல்நோக்கி வைத்தபடி தனது திருமுகத்தை ஆகாயம் பார்த்த வண்ணம் திருக் கோலம் கொண்டுள்ளார். இவ ருக்கு கீழே ஸ்ரீஇராமர் பாதம் உள்ளது சிறப்பு. இவரது வால் தலைக்குமேல் சுழன்று நிற்கும் வாலின் நுனியில் மணி ஒன்று இருக்கும். இவ்வகை அமைப்பிலான அனுமன் சிலை ஸ்ரீ மத்வாச்சாரியார் ஸ்தாபித்தது என்பர். இந்த கோலத்தை பிற தலங்களில் காண இயலாது.

வடக்கு முகம் பார்த்த சிறியதொரு ஆலயம். ஆலயத்தின் எதிரே விஜயநகர மன்னர்களால் ஏற்படுத்தப்பட்டதிருக்குளம் அமைந்துள்ளது. தற்போது இக்குளம் மிக நேர்த்தியாக அழகாக புதுப்பிக்கப்பட்டுள்ளது.


அதோடு, இவ்வாலயத்தில் நாகராஜர் சிலை களும் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது விசேஷம்.

மேலும் பத்தினி மற்றும் வாகனத்துடனான நவகிரகங்கள், அதோடு ஸ்ரீ காஞ்சி காமாக்ஷி அம்பாள் மற்றும் ஸ்ரீ மஹா பெரியவா விக்கிர கங்களும் நிறுவப்பட்டுள்ளது.

ஸ்ரீ மஹா பெரியவா தன்னை நாடி வரும் பக்தர்களுக்கு அனுமனை வணங்கும்படியும், ஸ்ரீஇராம நாமத்தை ஜபிக்கும்படியும், ஸ்ரீஇராம ஜெயம் எழுதும்படியும் பலமுறை வலியுறுத்தி யுள்ளார்.

அவரது வாக்கின்படி அன்பர்கள் எழுதிய ஸ்ரீஇராமஜெயம் எனும் மந்திரங்கள் பல கோடி ஸ்ரீராமஜெயம் ஜபமந்திரம் பிரதிஷ்டையுடன்நடை பெற்றது. இங்கு பரிவாதெய்வங்கள் நவகிரக கணபதி, கண்திருஷ்டி கணபதி, ஸ்ரீராமர்சீதா லெட்மணர் சன்னதி, ராமர் பிறந்தது முதல் பட்டாபிஷேகம் வரை தத்ரூபமாக உள்ளது. இங்கு உள்ள சன்னதியில் ஐஸ்வர்யம் தரும் 108 தெய்வ சிலைகளை இங்கு பக்தர்கள் தரிசனம் செய்யலாம். செல்வம், ஆரோக்கியம் கடன் நிவர்த்தி, வியாபாரம், உத்தியோகம், திருமணம், பிள்ளைவரம், சனிதோஷ நிவர்த்தி போன்ற பல கோரிக்கைகள் நிறைவேற ஸ்ரீ குபேர வீர ஆஞ்சநேயரை வேண்டி நிற்போம்.

# ஆன்மீக வழியில் அமைதி




பிரம்மத்தைச் சார்ந்துள்ள மாயாவை நாம் ஈஸ்வரன் என்று கூறுகிறோம். ஈஸ்வரன் என்ற பிரம்ம தத்துவத்திலிருந்து ஆகாசம் என்ற தத்துவம் முதலில் தோன்றியது. ஒரு காரணத்துடன் ஒரு நாம ரூபம் சேரும்போது ஒரு காரியம் (சக்தி)வெளிப்படுகிறது. தங்கம் என்ற உலோகத்துடன் காரண காரியத்துடன் நாம் ரூபம் சேரும்போது வளையல், டாலர். நெக்லஸ் போன்ற காரியம் (ஆபரணம்) உருவாகிறது. அதேபோல் மாயாவுடன் ஒரு நாம ரூபம் சேரும்போது ஒரு காரியம் உருவாகிறது. மாயையுடன் சப்தம் என்ற சிறப்பு குணம் சேரும்போது பஞ்ச பூதங்களில் ஒன்றான ஆகாசம் உருவானது என்று சாஸ்திரம் கூறுகிறது. அதாவது மாயை பஞ்ச பூதங்களில் ஒன்றான ஆகாசம் என்ற பூத தத்துவம் தோன்றியது. ஆகாசத்திலிருந்து வாயு, வாயுவிலிருந்து நெருப்பு தத்துவம், நெருப்பு தத்துவத்திலிருந்து நீர் தத்துவம் நீர் தத்துவத்திலிருந்து பூமி தத்துவம் என பஞ்சபூத தத்துவங்கள் தோன்றி இருக்கின்றன என்று சாஸ்திரம் கூறுகிறது.


சூக்ம பஞ்சபூதங்களில் ஒவ்வொரு பூத தத்துவத்துக்குள் சத்வ, ரஜோ, தமோ என மூன்று குணங்கள் இருக்கின்றன என சாஸ்திரம் கூறுகிறது. சூக்ம பஞ்சபூதங்கள் மாயையிடமிருந்து தோன்றியதால் மாயையிடம் உள்ள சத்வ, ரஜோ, தமோ என மூன்று குணங்களும் பஞ்சபூதங்களிடம் இருக்கின்றன. ஆகாச பூத தத்துவத்தில் இருக்கும் குணத்திலிருந்து ஒரு இந்திரியம் தோன்றியது. அதேபோல் ஒவ்வொரு பூத தத்துவத்தில் உள்ள குணங்களிலிருந்து ஒவ்வொரு இந்திரியம் தோன்றின. அதாவது சூக்ம பஞ் சபூதங்களில் உள்ள அம்சங்களிலிருந்து

ஐந்து ஞானேந்திரியங்கள் தோன்றின என்று சாஸ்திரம் கூறுகிறது.

**66**

சிருஷ்டி என்றால் உருவத்தை வைத்து மட்டும் குறிப்பிடுவதல்ல. எடுத்துக்காட்டாக மனித உருவம்

மட்டும் இருந்து அது உயிரற்ற ஜடமாக இருந்தால் அதனால் பிரபஞ்சத்தில் இயங்குவதற்கு முடியாது. உலகில் அதனைப் பிணம் என்றுதான் கூறப்படுகிறது. எனவே உருவத்திற்குத் தகுந்த சக்தியை கொடுத்தால்தான் ஒவ்வொரு உயிரும் அது பிரபஞ்சத்தில் இயங்க முடியும். குதிரைக்கு ஓடும் சக்தி, பறவைக்கு பறக்கும் சக்தி, நாய்க்கு மோப்ப சக்தி என ஒவ்வொரு உயிருக்கும் தேவையான சக்தியை இறைவன் அளித்துள்ளான்.



சூக்ம பஞ்சபூதங்களில் முதலாவது ஆகாச தத்துவ அம்சத்தில் உள்ள சத்வ குணத்திலிருந்து காதுகள் மூலம் கேட்கும் சக்தி தோன்றியது. அம்சம் என்றால் குணம் என்றும் கூறலாம். கேட்கும் சக்தி என்பது வெளித்தோற்றத்தில் நாம் காணும் காதுகள் அல்ல. காதுகளின் அமைப்பை வைத்து ஒரு மனிதனுக்கு கேட்கும் சக்தி இருக்கிறது என்று கூற முடியாது. ஒரு மனிதனுக்கு காது மடல்கள் அழகாக இருக்கும் அவன் கேட்கும் சக்தி இல்லாமல்கூட இருப்பான். பஞ் சபூதங்களில் முதலாவது ஆகாச தத்துவத்தில் உள்ள சத்வ அம்சம்தான் கேட்கும் சக்தியை அளிக்கிறது.

பஞ்சபூதங்களில் இரண்டாவது வாயு தத்துவத்தில் உள்ள சத்வ அம்சத்திலிருந்து அல்லது குணத்திலிருந்து தொட்டு உணரக்கூடிய சக்தி தோன்றியது. பஞ் சபூதங்களில் மூன்றாவது அக்கினி தத்துவத்தில் உள்ள சத்வ அம்சத்திலிருந்து கண்கள் மூலம் பார்க்கும் சக்தி தோன்றியது. பஞ்சபூதங்களில் நான்காவது நீர் தத்துவத்தில் உள்ள சத்வ அம்சத்திலிருந்து நாவின் மூலம் அறுசுவை உணரும் சக்தி தோன்றியது. பஞ் சபூதங்களில் ஐந்தாவது பிரிதிவி தத்துவத்தில் உள்ள சத்வ அம்சத்திலிருந்து நாசிகள் மூலம் நுகரும் சக்தி தோன்றியது. அதாவது பஞ் சபூதங்களில் உள்ள சத்வ அம்சத்திலிருந்து அல்லது குணத்திலிருந்து ஐந்து ஞானேந்திரியங்கள் என்ற சக்தி தனித்தனியாக தோன்றியது என்று சாஸ்திரம் கூறுகிறது.

ஞானேந்திரியங்கள் என்றால் நமக்கு ஸ்தூலமாக தோன்றும் கண்கள் , காதுகள் நாசி, நாக்கு, தோல் போன்றவை அல்ல. கண்களுக்கு பார்க்கும் சக்தி, செவிகளுக்கு கேட்கும் சக்தி, நாசிக்கு நுகரும் சக்தி, நாக்கு பேசும் சக்தி, தோல் தொட்டு உணரும் சக்தி போன்றவற்றை வெளிப்படுத்தும் சக்திகளுக்குத்தான் ஞானேந்திரியங்கள் என்று சாஸ்திரம் கூறுகிறது. அதாவது சூக்ம பஞ் சபூதங்களில் உள்ள சத்வ அம்சத்திலிருந்து வெளிப்படும் சக்திகள்தான் ஞானேந்திரியங்கள் என்று சாஸ்திரம் கூறுகிறது.



எழுத்தாளர்
பூ.சுப்ரமணியன்

அந்தக்கரணத்தின் மாறுதல்கள்

ஒரு பொருளைக் குறித்து அல்லது ஒரு செயல்பாட்டைக் குறித்து சங்கல்பம் விகல்பம் என்ற தன்மைகள் எழும்போது அதனை மனம் என்று சாஸ்திரம் கூறுகிறது. சூக்ம பஞ்சபூத தத்துவங்களின் சேர்க்கையிலிருந்து நமது மனம் என்னும் சூக்ம சரீரம் தோன்றுகிறது என்று தத்துவபோதம் கூறுகிறது.

பஞ்சபூத தத்துவ அம்சங்களில் உள்ள சத்வ அம்சம் எல்லாம் ஒன்றாகக் கலந்து மனம் என்னும் சூக்ம சரீரம் தோன்றுகிறது. அதாவது பஞ்சபூதங்களில் முதலாவது ஆகாச தத்துவத்தில் உள்ள சத்வ குணம், வாயு தத்துவத்தில் உள்ள சத்வ குணம், அக்கினி தத்துவத்தில் உள்ள சத்வ குணம், நீர் தத்துவத்தில் உள்ள சத்வ குணம், பிரிதிவி தத்துவத்தில் உள்ள சத்வ குணம் எல்லாம் ஒன்றாகக் கலந்து மனம்



என்னும் சூக்ம சரீரம் தோன்றியது என்று சாஸ்திரம் கூறுகிறது.

நமது சூக்ம சரீரத்தை மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்படுகிறது. சூக்ம பஞ் சபூதங்களில் உள்ள சத்வ அம்சம் ஒன்றாகக் கலந்து மனம் அல்லது அந்தக்கரணம் என்ற தத்துவ அம்சம் தோன்றியது என்று சாஸ்திரம் கூறுகிறது. பஞ்சபூதங்களின் தத்துவ அம்சங்களில் அல்லது குணங்களில் உள்ள சத்வ அம்சம் எல்லாம் ஒருங்கிணைந்து மனம் என்னும் அந்தக்கரணம் என்ற தத்துவம் தோன்றியது. அந்தக்கரணம் என்றால் நமது எண்ணங்களின் வெளிப்பாடு என்றும் கூறலாம். இந்திரியங்களை பாஷ்ய கரணம் என்று சாஸ்திரம் கூறுகிறது.

அந்தக்கரணம் கர்மேந்திரியங்கள் மற்றும் ஞானேந்திரியங்களின் பின்னணியில் இருந்துகொண்டு அவற்றின் செயல்களை ஒருங்கிணைக்கும் தன்மையுடையது. அவ்வாறு ஒன்றுசேர்த்து நமக்கு உள்ளே இருந்து அறிவை உண்டாக்குகிற நமது கண்களுக்குத் தெரியாத புலன்களையே அந்தக்கரணம் என்று வேதவேதாந்த சாஸ்திரங்கள் கூறுகிறது.

இந்திரியங்களின் பின்னணியில் இருந்துகொண்டு அவற்றின் செயல்பாடுகளை ஒருங்கிணைக்கும் அந்தக்கரணமானது மனம், புத்தி, சித்தம் மற்றும் அகங்காரம் என நான்குவிதமாக மாறுபட்டு செயல்படுகிறது. அதாவது ஒரு பொருளைக் குறித்து செயல்பாட்டைக் குறித்து ‘இது இப்படி அல்ல, அப்படி அல்ல’ என்று குழப்பம் அடைந்த மனதை உறுதியான அறிவை (ஞானத்தை) ஏற்படுத்தும் அந்தக்கரணத்தின் செயல்தான் புத்தி என்று சாஸ்திரம் கூறுகிறது. சித்தம் என்பது புத்தியிலும், அகங்காரம் என்பது மனதிலும் அடங்கியுள்ளது. ஒரு பொருளைப்பற்றி, ஒரு செயல்பாட்டை நினைவுபடுத்திக்கொள்வது சித்தத்தின் முக்கியமான இலக்கணமாக திகழ்கிறது.

மனதில் தோன்றக்கூடிய எண்ணங்களை மனம், புத்தி, அகங்காரம், சித்தம், என பிரிக்கப்பட்டு அந்தக்கரணம் என்ற தத்துவ அம்சம் தோன்றியது. நாம் நமது மனதை பற்றி சுருக்கமாக மனதில் நல்லெண்ணங்கள், தீய எண்ணங்கள் என இரு பிரிவுகள்தான் இருக்கின்றன என்று நினைத்துக்கொண்டு இருக்கிறோம். ஆனால் நமது மனம் சங்கல்பம், விகல்பம் என முதலில் இரண்டாகப் பிரிக்கப்படுகிறது.

சங்கல்பம் என்றால் ஒரே பொருளைப் பற்றி மனம் நினைத்துக்கொண்டிருப்பது அல்லது சிந்தித்துக்கொண்டிருப்பது ஆகும். அதாவது சங்கல்பம் என்றால் எண்ணுதல், சிந்தித்தல் போன்றவையாகும். விகல்பம் என்பது மனம் குழப்பத்துடன் இருப்பது ஆகும். அதாவது இப்படி இருக்குமோ, அப்படி இருக்குமோ என்று மனம் அலைபாய்ந்துகொண்டு குழப்பத்துடன் இருப்பது, ஆசைப்படுவது, வெறுப்பது, சந்தேகித்தல், ஐயப்படுதல் போன்ற செயல்பாடுகள் விகல்பம் ஆகும்.

ஒரு பொருளைப்பற்றி அல்லது செயலைப்பற்றி இதுதான் என்று முடிவான தீர்மானத்துக்கு எண்ணங்கள் வந்தால் அதற்குப் புத்தி என்று கூறப்படுகிறது. அதுவாக இருக்குமோ, இதுவாக இருக்குமோ என்று குழப்பத்துடன் இருப்பது விகல்ப மனம் ஆகும். குழம்பிய மனம், தெளிவான

மனம் என்று ஒவ்வொரு மனிதனிடமும் காணப்படும். எடுத்துக்காட்டாக சிறிது தூரத்தில் காணப்படும் வளைந்து நெளிந்து கிடக்கும் ஒரு தாம்புக்கயிறை பாம்பா கயிறா? என மனம் குழம்பிக்கொண்டிருப்பது விகல்பம். அதே மனம் அதனைக் கயிறுதான் அல்லது பாம்புதான் என்று முடிவுக்கு வருவது புத்தி ஆகும். அது சரியாகவும் இருக்கலாம். தவறாகவும் இருக்கலாம். எந்த மனம் உறுதியான முடிவுக்கு வருகிறதோ அதுதான் புத்தி. அதே மனம் கயிறா பாம்பா? என்று நினைத்து குழம்பிக்கொண்டிருப்பது விகல்பம். கயிறுதான் அல்லது பாம்புதான் என்று முடிவுக்கு வரும் மனம்தான் புத்தி என்று சாஸ்திரம் கூறுகிறது.

ஒருவருக்கு நாம் அறிவுரை கூறி அவர் கேட்டு அதன்படி நடக்க வேண்டுமானால் அவர் மனதில் தோன்றும் கருத்துக்கள் அல்லது செயல்பாடுகளில் அவர் ஏதும் நிச்சயம் செய்யாமல் இருக்க வேண்டும். அவ்வாறு இருந்தால்தான் நாம் கூறும் அறிவுரையைக் கேட்டு அதன்படி அவர் நடந்து கொள்வார். அதற்கு மாறாக அவர் மனதில் ஒரு கருத்தை, செயலை அவருக்குள் ஏற்கனவே நிச்சயம் செய்து விட்டால் நாம் கூறும் அறிவுரையை ஏற்றுக்கொள்ள மாட்டார். ஏன் என்றால் அவர் மனதில் ஏற்கனவே ஒரு கருத்தையோ செயல்பாட்டையோ நிச்சயம் செய்து விட்டார் என்பதை புரிந்து கொள்ள வேண்டும். நாம் கூறும் கருத்து சரியோ தவறோ அவர் மனதில் ஏற்கனவே நிச்சயம் செய்து விட்டால் நாம் கூறும் கருத்துக்களைக் அவர் கேட்க மாட்டார் அல்லது ஏற்றுக்கொள்ள மாட்டார் என்பதைப் புரிந்து கொள்ளலாம். .

ஆத்மாவை ஆத்மா என்று நினைக்காமல் அநாத்மா என்று நினைப்பதற்குப் பெயர் அகங்காரம் என்று சாஸ்திரம் கூறுகிறது. அதாவது அழியக்கூடிய இந்த சரீரத்தை நிரந்தரம் என்று நினைத்துக்கொண்டு தன்னுடைய சரீரம்தான் 'நான்' என்று எண்ணிக்கொண்டு இருப்பது அல்லது மனம் எண்ணிக்கொண்டு செயல்படுவது அகங்காரம் ஆகும். அதாவது 'தான்' 'தன்னுடைய' என்ற எண்ணமே அகங்காரம் எனப்படும். நாம் உலக வழக்கில் குறிப்பிடுவதுபோல் கர்வமாக இருப்பதற்குப் பெயர் அகங்காரம் அல்ல. அழியக்கூடிய இந்த சரீரத்தை 'நான்' என்று தவறாக நமது மனம் எண்ணிக்கொண்டு உலகில் செயல்படுவதைத்தான் அகங்காரம் என்று சாஸ்திரம் கூறுகிறது. அதாவது சரீரம் செய்வதை மனம் செய்வதாக நினைத்துகொண்டு 'நான்' என்று உணர்வுபூர்வமாக எண்ணுவதற்குப் பெயர் அகங்காரம்.

– அமைதி தொடரும்

**எழுத்தாளர் பூ.சுப்ரமணியன்**
Tahsildar (Retd) கைபேசி: 9894043308

ஆன்மிகம் தத்துவம் உடல்நலம் பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்



# உலகத்திலுள்ள எல்லா பொருள்களிலும் ருசி இருக்கிறது என்பதை உணர்ந்தவன் ஞானி

சீடன்: இறைவன் பொதுவானவன்தானே?

ஞானி: ஆமாம். எப்படி மழை பாரபட்சமில்லாமல் இருக்கிறதோ அதேபோல் கடவுள் எல்லா மதங்களிலும் வித்தியாசமில்லாமல் நுழைகிறான்.

சீடன்: இறைவன் ஏன் உடனே அருளுவதில்லை?

ஞானி: இறைவன் சிருஷ்டிகளை மனிதன் அனுபவிக்க வேண்டும் என்பதால் கடவுள் சிறிது சிறிதாகத்தான் உலகத்தை தன்பால் இழுக்கிறான்.

சீடன்: அத்வைதம் என்பது என்ன நிலை?

ஞானி: தங்கள் குணத்தை இறைவனின் குணத்தோடு ஒன்று படுத்துவது அத்வைதத்தின் உச்ச பரிணாம வளர்ச்சி.

சீடன்: ஆன்மிகம் என்றால் என்ன?

ஞானி: மஹான்களை பார்க்கும்போது மனம் விசாலமடைகிறதே அதுதான் ஆன்மீகம்.

சீடன்: லௌகீம் என்றால் என்ன?

ஞானி: மனிதனுடைய ஆசையை திறமையை வளர்த்துக் கொள்ளத் தூண்டும் உலகம்.

சீடன்: ஹிந்து மதத்தின் ஆணிவேர் என்பது என்ன?

ஞானி: பயமின்மை, அச்சம் தவிர் என்பதே.

சீடன்: உண்மை, நியாயம் விளக்கம் தேவை சுவாமி?

ஞானி: உண்மையின் மீது நியாயம் ஒட்டிக் கொண்டிருக்கும் நியாயமே உண்மையில்லை. கடவுளோடு அறிவு விஞ்ஞானம், ஞானம் என அனைத்தும் ஒட்டிக் கொண்டுள்ளது.

சீடன்: பற்று அறுக்க என்ன வழி?

ஞானி: பாத்திரங்களைத்தான் பார்க்கிறோம் என்று உணரும் போது பற்றுவிடுகிறது. கடவுள் மீதுதான் உலகம் ஒட்டிக் கொண்டுள்ளது என உணரும்போது பாசம் அறுந்து பக்தி பிறக்கிறது.

சீடன்: ஞானம் எப்பொழுது பிறக்கிறது?

ஞானி: சொல்லிலிருந்து பயம் எப்பொழுது விலகுகிறதோ அப்பொழுது ஞானம் பிறக்கிறது.

சீடன்: மனிதன் செய்யும் தவறு என்ன?

ஞானி: இறைவனை பயன்படுத்திக் கொண்டால் மனிதன் முடியவில்லை என்பதுதான் மனிதனின் தத்துவம். ஆண்டவன்தான் முடிவு என்ற நம்பிக்கை இருக்கிறது. ஆனால் முடியவில்லை, முயற்சி செய்யவில்லை என்பதுதான் தவறு.

சீடன்: நிலையாமை ஏன் இருக்கிறது?

ஞானி: கடவுள் வேண்டுமென்றே நிலையாமையை நிரந்தரமற்ற தன்மையை வைத்தான். அதனால்தான் மனிதன் உலககைக் கண்டு வியக்கிறான். ரசிக்கிறான், மகிழ்கிறான்.




சீடன்: மனிதன் பக்தனாகும் நாள் எது?

ஞானி: இதயத்தை கடவுளுக்காக கொடுக்கும் நாள்.

சீடன்: புத்தாண்டு நாள் எது?

ஞானி: தனக்குள்ளே தோன் றும் மகிழ்ச்சியை தானே ரசிக்கும் நாள்.

சீடன்: எதை ஆராயக் கூடாது?




ஆசிரியர், வெளியீட்டாளர்
**N.P.சந்திரன்**
**C.V. நடராஜன்**
செல்: 9444228203

♦♦♦

முதன்மை செய்தியாளர்:
அழகுராஜா
செல்: 9994323622

♦♦♦

துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர்,
ஸ்ரீபதி, ஸ்ரீவர்ஷினி, சாய்,
குருபிரியா
வேல் செல்

♦♦♦

வடிவமைப்பு
SML கிராபிக்ஸ்
செல்: 9444228203

நிர்வாக அலுவலகம்
**aanmeegamalar.com**
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.



## ஆசிரியர் குழுவில் இணையலாம்

**ஆன்மிகமலர்.காம் இதழில் இணைந்து செயல்பட விரும்புகிறீர்களா?... ஆன்மிகம் சம்பந்தப்பட்ட செய்திகளை எழுத ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளுங்கள்.**

தொடர்பு கொள்ளவும்
**9444228203**


**ஞானி:** அடுத்தவர் மகிழ்ச்சியை.
**சீடன்:** சாத்திரங்கள் என்றால் என்ன?
**ஞானி:** (சிரித்தபடி) மனிதன் ஏற்படுத்திக் கொண்ட அசௌகர்யங்கள்.
**சீடன்:** கடவுள் எப்பொழுது உதவுகிறான்?
**ஞானி:** பக்தி புத்துணர்ச்சியாக மலரும்போது.
**சீடன்:** மனம் குழம்புகிறதே?
**ஞானி:** அறிவிலே குழம்பு. விடை தெரியும்.
**சீடன்:** எதில் குழம்பக் கூடாது.?
**ஞானி:** அறியாமையுடன் குழம்பக்கூடாது.
**சீடன்:** பக்தியில் முதல் படி எது?
**ஞானி:** கடவுள் இருக்கிறான் என்பதில் சந்தேகம் போவது.
**சீடன்:** இரண்டாவது படி?
**ஞானி:** அவன் உபயோகமானவன் என்று தெரிந்து கொள்வது.
**சீடன்:** மூன்றாவது படி எது சுவாமி?
**ஞானி:** (சிரித்தபடி) கேள்வி கேட்காமல் முதலில் சொன்னதை செய்வது.
**சீடன்:** மனிதன் என்பவன் யார்?


ஆன்மிகமலர் ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!! .காம்


**ஞானி:** பொறுப்பை உணருகிறவன்,
**சீடன்:** ஞானி என்பவன் யார்?
**ஞானி:** உலகத்திலுள்ள எல்லா பொருள்களிலும் ருசி இருக்கிறது என்பதை உணர்ந்தவன்.
**சீடன்:** மனிதன் ஞானியாக மாறும் வாய்ப்புண்டா?
**ஞானி:** கல்லே உருண்டு உருண்டு சாளக்கிராமமாக மாறும்போது இதுவும் சாத்தியமே.
**சீடன்:** இறைபணி செல்லாத இடம் எது?
**ஞானி:** பணியா மனம் ஒரு பிணி. அது செல்லா இடம்.
**சீடன்:** கடவுளுக்கு உருவம் உண்டா?
**ஞானி:** பொருள் அறிவு உள்ளவரை உருவம் உண்டு.
**சீடன்:** உருவம் மறைவது எப்பொழுது?
**ஞானி:** பூமியில் பொருள் அறிவு மறையும்போது.
**சீடன்:** மனிதனுக்கு நிதானம் வருவது எப்பொழுது?
**ஞானி:** இறைவனை எண்ணும்பொழுது.
**சீடன்:** சூழ்நிலை இறுக்கம் அகலுவது எப்பொழுது?
**ஞானி:** அறிவு வரும்போது.
**சீடன்:** நம் நிலையை சரியாக உணருவது எப்பொழுது?
**ஞானி:** சமயத்தை சரியாக உணரும்போது.

ஞானச்சேரி ஞானிகள்
**பூஜ்ய ஸ்ரீசத்குரு சதாசிவ பிரும்மேந்திரரின்**
அருளுரையிலிருந்து தொகுத்தது மேலும் விபரங்களுக்கு
அழகுராஜா எஸ்.மகாதேவன், போன் 098410 28028



# வேதாள கணம் போற்றும் சேயூர் வேலவன்

அதாளியை ஒன்றறியேனை அறத்
தீதாளியை ஆண்டது செப்புமதோ!
கூதாள கிராத குலிக்கு இறைவா வேதாள
கணம் புகழ் வேலவனே!!

...என்று அருணகிரி நாதர் போற்றும் வேல வன் கந்தஸ்வாமியாக குடிகொண்டு அருளும் அற்புதத் தலம் சேயூர் என்னும் செய்யூர்.

சேய் என்பது கந்தனைக் குறிப்பிடும் சொல். கந்தசுவாமி இங்கு குடிகொண்டதால் சேயூர் என்றானது இத்தலம். அதுவே மருவி இன்று செய்யூர் ஆகியுள்ளது.

திருக்கழுகுன்ற மரபில் பிறந்த சோழ வம்சத் தைச் சேர்ந்த "வளவன் கழுக்குன்றன்" என்கிற சோழ வேந்தன் இவ்வாலயத்தில் திருப்பணிகள் செய்து, குடமுழுக்கு நடத்தினான். இவனது சிலா வடித்தை ஆலய மகா மண்டபத்தில் இன்றும் காணப்பெறலாம். கி.பி. 1070 முதல் கி.பி. 1118 வரை இரண்டாம் குலோத்துங்கச் சோழன் இப்பகுதியை ஆண்டதால் வளவ நகர் என்று அழைக்கப்பெற்றது இவ்வூர்.

வளவாபுரி, அயில்வனம், செய்கையம்பதி, செய்கை நகர் போன்ற பெயர்களாலும் இத்தலம் அழைக்கப்பட்டுள்ளது.

அருணகிரிநாதர் "வளவாபுரி" என்று குறிப் பிட்டு இத்தல கந்தசுவாமி மீது இரண்டுத் திருப் புகழ் பாமாலைகளைச் சூட்டியுள்ளார்.

அதில் ஊழ்வினை மற்றும் கர்மவினை என இரு வினைகளையும் இத்தல வழிபாட்டால் நீக்கிக் கொள்ளலாம் என்கிறார் அருணகிரியார் ஆணித்தரமாக.....!

பிறவியிலேயே கண் பார்வையற்ற அந்தகக்கவி வீரராகவ முதலியார் இத்தல முருகனைக் குழந்தையாக பாவித்து, பிள்ளைத்தமிழ் இயற்றி யுள்ளார்.

வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள், சிவப்பிரகாச சுவாமிகள், சேறைக் கவிராயர் என எண்ணற்றோர் இந்த சேயூர் மீது பாக்கள் பணிந்து, பாடி போற்றியுள்ளனர். முத்தையா முதலியார் என்பவர் இத்தலபுராணத்தை இயற்றி யுள்ளார்.

பூத நாயகன், பூதப்படைத் தலைவன் என் றெல்லாம் போற்றப்படும் சிவபெருமான் இந்த பூத வேதாளங்களின் தாளத்திற்கு ஏற்பவே நடனமாடுவார்.

"பூத கணாதி சேவிதம்" என்பது கணபதியை பூத வேதாள கணங்கள் சேவிப்பதை குறிப்ப தாகும்.

"ஸர்வபூத தயாபர" என்று ஐயப்ப சுவாமியை பூதகண நாயகனாக கூறுகிறது ஸ்ரீ சாஸ்தா சதகம்.

அதுபோல இந்த செய்யூர் கந்தசுவாமி ஆலயத்தில் ஸ்ரீ பைரவருக்குக் கட்டுண்டு, 27 நட்சத்திரங்களுக்கான 27 பூத வேதாள கணங்

கள் சூழ்ந்து இங்கு கந்தனை போற்றுகின்றன.

ஆறுமுகப்பெருமான் திருச்செந்தூரில்சூரனை வதம் செய்தார். சூரபதுமனைப் போரில் வதைத்திட... முருகப்பெருமானுக்கு உதவிய பைரவரின் பூத வேதாள கணங்கள், "வள்ளிதெய்வானையுடன் முருகப்பெருமான் வீற்றிருக்கும் திருக்கோலத்திதை எங்களுக்குக் காட்சித்த஌ர வேண்டும்" என பைரவரிடம் கோரிக்கை வைத்தன.

பைரவர், முருகப்பெருமானிடம் பூத வேதாளங்களின் கோரிக்கையை கூறினார். மகிழ்ந்த குமரன், "அப்பன் ஈசன் ஆட்சீஸ்வரராக அருள் புரியும் அச்சிறுபாக்கத்திற்கு அருகில் உள்ள தலத்தில் யாம் கோயில் கொண்டெழுந்து, அனுதினமும் ஈசனை அராதிக்க உள்ளோம். அங்கு வேதாள கணங்கள் வந்தால் அவர்களுக்கு துணைவியர் சகிதமாகக் காட்சி கொடுப்போம்" என்று கூற, பைரவரும், உடன் வேதாளங்களைக் கூட்டிக்கொண்டு செய்கையம்பதி வந்தடைந்தார்.

இங்கு தீர்த்தம் [செட்டிகுளம்] ஏற்படுத்தி, சோமநாதரை தினமும் அர்த்தஜாமத்தில் கந்தன் பூஜிக்கும் சமயம், வள்ளி தேவசேனா சமேத ராக கந்தன் 27 நட்சத்திர பூத வேதாள கணங் களுக்கு காட்சி தந்து, அருள் புரிகின்றார்.

சோமநாதர் சன்னிதிக்கு வெளியே பிரம்மாவும், விஷ்ணுவும் துவாரபாலகர்களாகக் காவல் புரிவதால் மும்மூர்த்திகளின் தரிசனத்தையும் இங்கு நாம் கண்டு பரவசமடையலாம்.

பூத வேதாள கணங்கள் பைரவரை தவிர, வேறு யாருக்கும் கட்டுப்படாததால், பைர வருக்கு உரிய தேய்பிறை அஷ்டமியில் இத்தலத்தில் அவரவர் நட்சத்திரத்திற்குஉரிய பூத வேதாள கணங்களை வழிபட்டு, தங்களது பிரார்த்தனைகளை பைரவர் மூலமாக முருகப்பெருமானிடம் சேர்த்து, தங்களின் எண்ணம் ஈடேறப் பெறுகின்றனர் பக்தர்கள்.

27 நட்சத்திரங்களுக்கு உரிய 27 வேதாள பூத கணங்கள் சூழ குமரனு வீற்றருளும் இந்த செய்யூர் தலம், மற்ற தலங்களை விட முற்றிலும் வித்தியாசமானது.

கிழக்குப் பார்த்த ஆலயம். நாற்புறமும் உயர்ந்த மதில்கள். ஆனால் கிழக்குப்புறம் எந்தவித பிரதான வாசலும் கிடையாது. பிரதான வாயில் தோரண வாயிலாகத் தூண்கள் கொண்டு தெற்கே அமைந்துள்ளது.

உள்ளே சென்று, வலப்புறம் நடந்து, ஆலய முன்புறம் அடைந்து, த்வஜஸ்தம்பத்தை வணங்குகின்றோம். பின்னே பலிபீடம். முன்னே மயில் வாகன மண்டபம்.

கிழக்கு வாயிலுள் நுழைகிறோம். அங்கே வாயிற்க் காப்பாளர்களாக சுவீரனும், சுஜனனும் காவல் புரிகின்றனர்.

உள்ளே செல்ல... இடப்புறம் கருவறைக்கு எதிரில் ஸ்ரீ பைரவர் அற்புதக் கோலத்தில் அருட்காட்சியருள்கின்றார். அவரைப் பணிந்து வணங்குகின்றோம். சற்று தள்ளி தென்முகமாக உற்சவர் மண்டபம் உள்ளது. கருவறைக்கு முன்னே வாயிலின் வலப்பக்கம் கணபதியும், இடப்பக்கம் கஜலக்ஷ்மியும் வீற்றருள் புரிகின்றனர். கந்தனுக்கு எதிரில் வலப்புறம் குஹசூரியன் திருவருள்.புரிகின்றார்.

கருவறையுள் கருணை வடிவாக அருட்காட்சி யளிக்கின்றார் ஸ்ரீ கந்தசுவாமி. தேஜோமயமான






முகம். கம்பீரத் தோற்றம். உடன் வள்ளியும், தெய்வானையும் அருள்பாலிக்கின்றனர். திருப்போரூர், சென்னை கந்தகோட்டம் மற்றும் இந்த செய்யூரில் மட்டும்தான் கந்தசுவாமி என்கிற திருநாமம் கொண்டு முருகன் திகழ்கின்றான்.

கந்தனின் அதியற்புத தரி சனம் முடித்து, உட்பிராகார வலம் வருகின்றோம் இங்கு சிவ கோஷ்ட தெய்வங்களோ, சக்தி கோஷ்ட தெய்வங்களோ அல்லாமல், பிரத்தியேகமாக கந்தனின் பிற வடிவங்களையே கோஷ்ட தெய்வங்களாகக் காணப்பெறலாம்.

முதலில் தென் கோஷ்டத்தில் நிருத்த கணபதிக்கு பதில் நிருத்த ஸ்கந்தரும்[நடன மாடும் முருகர்], தட்சிணாமூர்த்திக்கு பதில் சிவகுருநாதரும் [சிவனுக்கு உபதேசம் செய்த கோலம்], மேற்கு கோஷ்டத்தில்விஷ்ணுவுக்கு பதிலாக பாலசந்தரும், வட கோஷ்டத்தில் பிரம்மா வுக்கு பதிலாக பிரம்ம சாஸ்தாவும் [பிரம்மனை சிறையிலிட்டு, அவரது ஆயுதங்களுடனான கந்தன்], துர்க்கைக்கு பதிலாக புளிந்தரும் [வேடுவர் உருவில் வள்ளியை மணந்த கோலம்] வீற்றருளுகின்றனர்.



மோ.கணேஷ்

பின்னர் தென் வாயில் வழியாக வெளியே வருகையில், கந்தன் நித்தமும் வழிபடும் ஸ்ரீ மீனாட்க்ஷி உடனுறை ஸ்ரீ சோமநாதீஸ்வரர் கோவில் கொண்டு அருள் புரிகின்றார். துவார பாலகர்களாக....பிரம்மாவும், விஷ்ணுவும் விற்றுள்ளனர். எதிரில் சிவசூரியன் எழில் சிந்துகின்றார்.

உட்பிராகாரம் முடித்து, வெளிப் பிரகார வலம் வருகையில், கொடி மரத்தின் அருகே தென்முகமாக கல்யாண மண்டபமும், பின்னே வள்ளி மற்றும் தெய்வானையின் தனி சன்னதியும் காணப் பெறுகின்றன. கிழக்கில் நவகிரக சன்னிதியுள்ளது. ஜென்மதில் தொட்டு, மேற்கு வடக்கு கிழக்கு என சுவர்களின் உட்புறம் 27 நட்சத்திரங்களுக்குரிய 27 பூத வேதாளங்கள் கவினுற புடைக்கப்பட்டுள்ளன.

இது மாதிரியான முற்றிலும் மாறுபட்ட அமைப் பினை வேறு



எந்த முருகன் ஆலயத்திலும் நாம் காண இயலாது.

இங்கு பெரியாண்டவருக்கும் பூஜை நடை பெறுகின்றது.

இத்தலத்தின் விருக்ஷமாக வன்னி மற்றும் கருங்காலி திகழ்கிறது.

இந்து சமய அறநிலையத் துறையைச் சேர்ந்த இவ்வாலயம் காலை 6 மணி முதல் 11.30 மணி வரையும், மாலை 4.30 மணி முதல் 7.30 மணி வரையும் திறந்திருக்கும். தினசரி இங்கு நான்கு கால பூஜைகள் நடைபெறுகின்றன

இத்தலத்தின் விசேடங்களாக....பிரதி கிருத் திகை, சஷ்டி, தேய்பிறை அஷ்டமி, தை கிருத்திகை, தைப்பூசம், பங்குனி உத்திர திருக்கல்யாணம், வைகாசி விசாகம், ஆடி கிருத்திகை, கந்தர் சஷ்டி, சூரசம்ஹாரம், கார்த்திகை தீபம் ஆகியன கொண்டாடப்படுகின்றன.

பங்குனி உத்திர விழாவின் ஏழாம் நாள் நடைபெறும் தேர்த் திருவிழாவும், கந்தர் சஷ்டி யில் நடைபெறும் வேல் வாங்கும் விழாவும் இங்கு வெகு சிறப்பு.

❖ ஒவ்வொரு மாதமும் தேய்பிறை அஷ்டமி யில் மாலை 04.30க்கு முதலில் கணபதிக்கு அபிஷேகமும், பின் 27 பூத வேதாளங்களுக்கு எண்ணெய்க் காப்பும், செவ்வரளி பூக்களால் பூஜையும் நடக்கிறது. அப்போது பக்தர்கள் தமது நட்சத்திரத்திற்குரிய வேதாளங்களுக்கு மலர் தூவி, நல்லெண்ணெய் தீபமேற்றி, வழிபடுகின்றனர். தனித்தனியாக தீவட்டியும் கொளுத்துகின்றனர். நிவேதனமாக பொரி, கடலை, சாதம், பனைவெல்லம் கலந்த எள், வாழைப்பழம் இவைகளைப் படைத்து, உரிய ஸ்தோத்திரம் கூறி, கற்பூரம் காட்டி வழிபடு கின்றனர்.

பின் சுவாமி, அம்பாள், கந்தன் மற்றும் பைரவருக்கு அபிஷேகம் நடத்தப்படுகிறன்து. நண்பனுக்கு தேனும் தினைமாவும் நைவேத்தியம் செய்யப்படுகின்றது.

கடைசியாக பைரவருக்கு மிளகு முடிச்சிட்ட தீபமும், வெண்பூசணிக்காய் தீபமும் ஏற்றி, புனுகு, மரிக்கொழுந்து சாற்றி, தயிர் சாதமும், மிளகு வடையும் நிவேதித்து பூஜையை நிறைவு செய்கின்றனர்.

இவ்வாறு ஆறு தேய்பிறை அஷ்டமியில் அவரவர் நட்சத்திரற்கு நட்சத்திரங்களுக்குரிய வேதாள கணங்களை வணங்கி, வழிபட்டு, நமது கோரிக்கைகளை அவர்கள் முன் வைத்தால் அக்கோரிக்கைகளை வேதாளங்கள் பைரவர் மூலமாக முருகனிடம் கொண்டுபோய் சேர்த்து, அவை நிறைவேற்றப்படுகின்றன.

❖ இத்தல முருகனை வழிபட்டால் [சேய் வரம்] குழந்தை வரம் நிச்சயம். அதோடு குழந்தைகளுக்கு ஏற்படும் பாலாரிஷ்டம் முதலிய தோஷங்களையும், நோய்களையும் களைந்து

நிம்மதியடையலாம்.

❖ ஸ்ரீ சோமநாதரை திங்கட்கிழமை, மாத சிவராத்திரி மற்றும் பிரதோஷ நாட்களில் 5 தீபமேற்றி வழிபட.... சகல உடற்ப்பிணிகளும், கிரக பீடைகளும் நீங்கும்.

❖ குரு தோஷம் உள்ளவர்கள் குருவருள் வேண்டுபவர்கள் ஸ்ரீ சிவகுருநாதரை வியாழக் கிழமைகளில் 3 நெய்தீபம் ஏற்றி வழிபட வேண் டும்.

❖ தலைவிதியை நொந்துக் கொள்பவர்கள் இத்தல பிரம்ம சாஸ்தாவை வழிபட்டால் தலைவிதியையே கந்தன் அருளால் மாற்றி அமைத்திடலாம். பிரம்ம சாஸ்தாவை புதன்கிழமை களில் 6 நெய்தீபம் ஏற்றி, வழிபட வேண்டும். இவ்வாறு ஆறு வாரங்கள் செய்து வர வேண்டும். இதனால் வறுமை, பிணி அகலும். கல்வி கேள்விகளிலும் சிறந்து விளங்கலாம்.

❖ இத்தல விநாயகர், ஈசன், அம்பாள், கந்தசுவாமி, பைரவர் மற்றும் 27 நட்சத்திர பூத வேதாளங்களையும் வழிபட்டு, செவ்வரளி மலர் மற்றும் மரிக்கொழுந்து இவற்றால் அர்ச்சித்து, கந்தசுவாமியாய் விளங்கும் முருகப்பெருமானின் கருவறை தீபத்தில் பசுநெய் சேர்த்து, தொடர்ந்து ஆறு வாரங்கள் செவ்வாய்க்கிழமைகளில் வழிபட்டு வந்தால், கண் திருஷ்டி, ஏவல், பில்லி, சூன்யம், செய்வினை தோஷங்கள், கிரக தோஷங்கள், வறுமை, பிணி, மூப்பு முதலியன அகல்கின்றன.

❖ 6 சஷ்டி மற்றும் 6 கிருத்திகைகளில் கந்தனுக்கு அர்ச்சனை செய்து, செவ்வரளி சாற்றி, நெய் தீபங்கள் ஏற்றி வழிபட.... சத்ரு தொல்லை நீங்கும். இங்கு சத்ரு சம்ஹார யாகமும் நடைபெறுகிறது.

❖ இத்தல கஜலட்சுமிக்கு நெய்தீபம் ஏற்றி 6 தேய்பிறை அஷ்டமி பூஜையில் கலந்து கொண்டு வழிபட.....நட்சத்திர தோஷங்கள், கிரக தோஷங்கள், பிற ஜாதக தோஷங்கள் நீங்கப்பெற்று, சகல சௌபாக்கியமும் பெற்று சிறக்கலாம்.

சென்னை திருச்சி தேசிய நெடுஞ்சாலை யில் உள்ள மேல்மருவத்தூரில் இருந்து 20 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளது செய்யூர். மேல்மருவத்தூர், மதுராந்தகம், மரக்காணம் போன்ற ஊர்களில் இருந்து செய் யூருக்கு நேரடிப் பேருந்துகள் உள்ளன.

– பழங்காமூர் மோ.கணேஷ்.

தொடர்பு எண்: 9789156179





# ஏவல், பில்லி, சூன்ய பிரச்சனைகளுக்கு 48 நாளில் தீர்வு கொடுக்கும் தூபம்

மதபிறவி எடுக்கும் ஒவ்வொருவரும் தமது கர்மவினைகளை அனுபவிக்க பிறந்தவர்களே! நம்முடைய கர்மவினைகளுக்கு ஏற்ப நன்மையோ அல்லது தீமையோ நம் வாழ்வில் நடந்தவண்ணம் இருக்கும். ஒருவருக்கு செய்வினை பாதிப்பு ஏற்படுவதும் அவரது கர்மவினையை பொறுத்ததே. அந்த பாதிப்பிலிருந்து விடுபடுவதும் விடுபடாமல் பிறரால் ஏமாற்றப்படுவதும் அவரது கர்மவினை பலனே.

இக்காலத்தில் பொறாமை, வஞ்சனை கொண்ட மனிதர்கள் தமது எதிரிகளை நேரடியாக எதிர்க்க துணிவில்லாமல் மறைமுகமாக தாக்கி அழிக்கவே ஏவல், பில்லி, சூனியம் மற்றும் செய்வினை இவற்றை செய்கின்றனர்.

மாந்திரீகம் மூலம் மற்றவர்களுக்கு கெடுதலை உண்டாக்கும் மனிதர்களே இவ்வுலகில் தீய சக்தி ஆவார்கள். இவர்களின் செய்கையால் பலர் அவதிக்குள்ளாகி வருகின்றனர். செய்வினையால் பாதிக்கப்பட்டவர்களில் மகான்களும் உள்ளனர். ஆதிசங்கரர், அருணகிரிநாதர் போன்றோரே இதற்கு சாட்சி.

மனிதர்களுக்கு மட்டுமல்லாமல் தெய்வத் திற்கே சூனியம் செய்த வரலாறும் உண்டு. பண்டாசூரன் விக்ன யந்திரத்தின் மூலம் சக்தி யின் சேனைகளை நோயுற செய்தான். சக்தியால் அவனை வெல்ல இயலவில்லை.

தடைகளும், அபசகுணங்களும் ஏற்பட்டன. அதன் பிறகே சக்தி தனது மைந்தனாகிய விநாயக பெருமானை வேண்ட விநாயக பெரு மான் அந்த விக்ன யந்திரத்தை கிழித்து கடலில் எறிந்தபின்னரே சக்தி பண்டாசூரனை வதம் செய்தாள்.

இப்படிப்பட்ட செய்வினை, ஏவல், பில்லி, சூனியம், கண்திருஷ்டி மற்றும் பிற தீயசக்திகளும் எதிர்மறை சக்திகளும் அழிந்தோட ஒரு எளிய முறை உண்டு. இதோ அதன் செய்முறை!

பொருட்கள் அளவு

1. வெண்கடுகு ........................ 250 கிராம்
2. நாய்க்கடுகு ........................ 250 கிராம்
3. மருதாணி விதை .................. 250 கிராம்
4. சாம்பிராணி ........................ 250 கிராம்
5. அருகம்புல் பொடி .................. 50 கிராம்
6. வில்வ இலை பொடி ............... 50 கிராம்
7. வேப்ப இலை பொடி ............... 50 கிராம்

மேற்கண்ட பொருட்களை தயார் செய்து கொள்ளவும். இவை அனைத்தும் நாட்டு மருந்து கடைகளில் வெகு எளிதாக கிடைக்கக் கூடியவை. எங்கும் தேடி அலைய வேண்டாம். சாம்பிராணியை மட்டும் பொடி செய்து கொண்டு மீதமுள்ள 6 பொருட்களுடன் சேர்த்து ஒரு கல னில் அடைக்கவும்.

இவ்வாறு தயாரிக்கப்பட்ட பொருட்களின் கலவையை செவ்வாய், வியாழன் மற்றும் ஞாயிறு கிழமைகளில் அடுப்புக்கரி நெருப்பில் தூவி தூபம் போடவும். தினமும் செய்தால் தவறில்லை.

தொடர்ந்து 48 நாட்களுக்குள் நிச்சயம் பலன் உண்டாகும். ஏவல், பில்லி, சூனியம், செய்வினை, எதிர்மறை மற்றும் தீய சக்திகள் அனைத்தும் நீங்கும். குடும்பத்தில் அமைதி உண்டாகும். குடும்பத்தின் உறுப்பினர்களிடையே ஒற்றுமை உண்டாகும். லட்சுமி கடாட்சம் உண்டாகும்.

மேற்கண்ட கலவையை நெருப்பில் தூவும் போது கீழே சிந்தாமல் கவனித்துக் கொள்ளவும். மேற்கண்ட 7 பொருட்களும் தெய்வத்தன்மை பொருந்தியவை, யார் காலிலும் படக்கூடாது.

# ருத்திராபிஷேகம் செய்து வடைமாலை சாற்றினால் திருமணபாக்கியம் தரும் பைரவர்

பைரவர் என்றால் பயத்தை நீக்குபவர். தன்னை நாடி வரும் பக்தர்களின்பாவத்தை போக்குபவர் என்று பொருள். தினமும் வேதனையை அனுபவிப் பவர் கள், தாங்க முடியாத அளவிற்கு எதிரிகளால் துன்பம் அடைபவர்கள், அவற்றில் இருந்து விடுபட பைரவரைவழிபடலாம். விபத்து, துர்மர்ணம் இவற்றில் இருந்து காப்பவரும்பைரவரே. அந்த அளவிற்கு பைரவர் முக்கியத்துவம் வாய்ந்தவர்.



பைரவரை தொடர்ந்து வணங்கினால் தீவினைகள் அழியும். எதிரிகள் தொல்லை ஒழியும். யாருக்கும் அடிபணியாத, தலை குனியாத வாழ்க் கை அமையும். குழந்தை பாக்கியம் கிடைக்கும். நவக்கிரகங்களால் ஏற்படும் துன்பம் நீங்கும். வறுமை நீங்கி செல்வச் செழிப்பு உண்டாகும்.

இழந்த பொருள் செல்வத்தை மீண்டும் பெறலாம். திருமணத்தடை அகலும். தடைப்பட்ட அனைத்து காரியங்களும் நிறைவேறும். பிதுர் தோஷம் விலகும்.

ஸ்ரீ பைரவருக்குப் பவுர்ணமிக்கு பின்வரும் தேய் பிறை அஷ்டமியில் பஞ்சதீபம் ஏற்றி வழிபட்டால் காலத்தினால் தீர்க்க முடியாத தொல்லைகள் நீங்கும். நல்லருள் கிட்டும், இலுப்பை எண்ணை, விளக்கு எண்ணை, தேங்காய் எண்ணை, நல்லஎண்ணை, பசு நெய் இவற்றினை தனித்தனி தீபமாக அகல் விளக்கில் ஏற்றலாம்.

ஒன்றிலிருந்து ஒன்றை ஏற்றாமல்தனித்தனி தீபமாக ஏற்றி வழிபட்டால் எண்ணிய காரியங்கள் நிறைவேறும் என்பது ஐதீகம். ஆறு தேய்பிறை அஷ்டமிகளில் பைரவரை சிவப்பு நிற அரளியால் வழிபட்டால் நல்ல மக்கள் செல்வங்களைப் பெறலாம்.

அஷ்டமி திதியில் மற்றும் பிரதி தமிழ் மாதம் எல்லாத் தேதியிலும் ஆயில்யம், சுவாதி, மிருகசீரிஷம், நட்சத்திர தினங்களிலும் பைரவரை வழிபட்டால் உத்தியோகத்தில் மதிப்பும், பதவி உயர்வும் கிட்டும். தொழிலில் லாபம் கிட்டும். சனி பிரதோஷத்தன்று பைரவருக்கு தயிர் அன்னம் படைத்து வழிபட்டால் வழக்குகளில் வெற்றி கிட்டும்.

தேய்பிறை அஷ்டமியில் பஞ்ச தீபம் ஏற்றி வழிபட்டால் காலத்தினால் தீர்க்க முடியாத தொல் லைகள் நீங்கும். நல்லருள் கிட்டும். பஞ்ச தீபம் என்பது இலுப்பை எண்ணை, விளக்குஎண்ணை, தேங்காய் எண்ணை, நல்லஎண்ணை,பசு நெய் ஆகும். இவற்றைத் தனித்தனி தீபமாக ஏற்ற வேண்டும். அகல் விளக்கில் ஏற்றலாம்.

ஸ்ரீ பைரவருக்கு இந்த பஞ்ச தீபம் ஏற்றி வழிபட்டால் எண்ணிய செயல்கள் நிறைவேறும் என்பது ஐதீகம். தை மாதம் முதல் செவ்வாய்க் கிழமை

தொடங்கி ஒவ்வொரு செவ்வாய் தோறும் பைரவரை வணங்கி கால பைரவ அஷ்டகம் படித்து வந்தால் எதிரிகள் அழிந்து, கடன்கள் தீர்ந்து, யம பயம் மட்டுமில்லாது எவர் பயமுமின்றி நீண்டநாள் வாழலாம்.

வாழ்க்கையில் தரித்திரம் வராமல் காத்து செல்வச் செழிப்பை வழங்குபவர். ஸ்வர்ணாகர்ஷண பைரவரை வடக்கு திசை நோக்கி அமர்ந்து வழிபடுவது சிறப்பு. திருவாதிரை நட்சத்திரத்தில் வழிபடுவதால் சிவனது அருள், செல்வம் கிட்டும், தாமரை மலர் மாலை, வில்வ இலை மாலை போடுவது சிறந்தது.

தேய்பிறை அஷ்டமி திதிகளில் செவ்வாடை அணிவித்து, நெய் விளக்கு ஏற்றி, வடைமாலை சாற்றி, செந்நிற மலர்களைக் கொண்டு அர்ச்சித்து, வெள்ளைப் பூசணியில் நெய் தீபம் ஏற்றிவர நல்ல பலன் கிடைக்கும். ஞாயிற்றுக்கிழமை மாலை ராகு கால நேரத்தில் பைரவருக்கு 11 நெய் தீபம் ஏற்றி விபூதி அல்லது ருத்திராபிஷேகம் செய்து, வடைமாலை சாற்றி சகஸ்ரநாம அர்ச்சனை செய்து வழிபட்டால் திருமணம் ஆகாதவர்களுக்கு விரைவில் திருமணம் கைகூடும்.

இவரை வழிபாடு செய்வதால் வறுமை, பகைவர்களின் தொல்லைகள், பயம் நீங்கி அவர் அருளால் அஷ்ட ஐஸ்வர்யங்களும், தன லாபமும், வியாபார முன்னேற்றம், பணியாற்றும் இடத்தில்தொல்லைகள் நீங்கி மனத்தில் மகிழ்ச்சியை பெறலாம்.

நம்பிக்கையுடன், பக்தியுடன் சொர்ணாகர்ஷண பைரவர் படத்தை வீட்டில் வைத்து தினந்தோறும் தூப தீபம் காட்டி வழிபட்டு வருவதுடன் தேய்பிறை அஷ்டமி திதியில் திருவிளக்கு பூஜை செய்து பலவிதமான மலர்களைக் கொண்டு பூஜித்து வணங்கி வந்தால் வீட்டில் செல்வச் செழிப்பு ஏற்படும். வியாபாரிகள் கல்லாப் பெட்டியில் சொர்ண ஆகர்ஷண பைரவர், பைரவி சிலை அல்லது படத்தை வைத்து பூஜித்து வர கடையில் வியாபாரம் செழித்து செல்வம் பெருகி வளம் பெறுவார்கள்.



தினமும் பைரவர் காயத்ரியையும், பைரவி காயத்ரியையும் ஓதி வந்தால் விரைவில் செல்வம் பெருகும். வெல்லம் கலந்த பாயசம், உளுந்து, வடை, பால், தேன், பழம், வில்வ இலைகளால் மூல மந்திரம் சொல்லி அர்ச்சனை செய்ய தொழில் விருத்தியாகும்.

ஸ்வர்ணாகர்ஷண பைரவ அஷ்டகம் தனச்செழிப்பைத் தரும் வெள்ளிக்கிழமை, திங்கட்கிழமை இரண்டு நாட்களிலும் சந்தியா காலங்களில் படிப்பவர்கள் வாழ்க்கையில் வெற்றியையும், தன விருத்தியையும் அடைவார்கள்.

பவுர்ணமி அன்று இரவு எட்டு மணிக்கு தீபத்தை ஏற்றி வைத்துக் கொண்டு 18 முறை பாராயணம் செய்ய வேண்டும். இவ்விதம் ஒன்பது பவுர்ணமிகளில் பாராயணம் செய்தால் தன வரத்தை அடையலாம். நீண்ட நாட்களாக உள்ள வறுமையிலிருந்து விடுபடலாம். 9வது பவுர்ணமியன்று அவலில் பாயசம் நைவேத்தியம் செய்யலாம்.

### ஸ்ரீ மஹா பைரவரை வணங்குதலால் ஏற்படும் பலன்கள்

- தலை குனியா வாழ்க்கை.
- சுப மங்களம் ஊர்ஜிதம்.
- தீய வினைகள் முற்றிலும் அழிவு.
- பிறவியின் பலனை முழுவதுமாக உணர்தல்.
- தடையில்லாமல் சௌ கரியம் ஏற்படுதல்.
- கர்வம் இல்லாமல் சமயோஜித பாக்கியம்.
- கிரகன தோஷங்களின் பாதிப்பு விலகுதல்.
- வாழ்ந்த ஜனனங்களின் பிறவியை புனிதப்படுத்துதல்.
- இறைவனை எளிதாக உணர்தல்.
- உலக உயிரினங்களின் காவல் தெய்வம் என்பதை உலகுக்கு உணர்த்தி விடுதல்.

இதுபோன்ற பலன்களை நாம் ஸ்ரீ மஹா பைரவர் கடவுளை வணங்கி வரும்போது அனு பவ உணர்வுகளால் நிச்சய பலனாக பெற முடி யும் என்பதில் சந்தேகம் இல்லாமல் ஊர்ஜிதம் செய்யலாம்.

ஒரு வரியில் ஸ்ரீ பைரவர் காயத்திரி மந்திரம் 108 முறை சொல்வது நல்லது

**ஓம் ஸ்ரீம் க்லிம் ஸ்ரீ கால பைரவாய நமஹ!** அனைத்து மக்களும் இதை எளிதாக சொல்ல லாம், பூர்ணமான பலன் கிடைக்கும்.







பாரம்பரியமான,
சத்தான, சுவையான
சமையல் குறிப்புகளை
மிக எளிமையாகவும்,
தெளிவாகவும் அறிந்து கொள்ள
கீதாசமையல்
(geetha samayal)
youtube சேனலை பாருங்கள்




geetha samayal வீடியோவை பார்த்து
Like, Share, Subscrib செய்யுங்கள்

# தியானத்தில் மனம் லயிக்கவில்லையா? எளிய குறுக்குவழியை பின்பற்றுவோம்

தியானம் யோகம் என்பது நினைத்தவுடன் நினைத்த இடத்தில் செய்துவிட முடியும்.

இதில் சுற்றுச் சூழல் அமைதியும், சாந்தமாகவும் இருந்தால் இன்னும் சிறப்பாக தியானத்தில் மூழ்கிவிடமுடியும்.

அக்காலத்தில் முனிவர்கள் கையில் தண்டத்துடன் சுற்றிவந்தனர், அவர்கள் செல்லும் வழியில் வனமோ, அமைதி தவழும் இடமோ தென்பட்டால் தனது தண்டத்தின் உதவியுடன் தியானத்தில் ஆழ்ந்து விடுவார்கள்.

ஆனால்... நாம் எவ்வளவு முயன்றாலும், அமைதியான சூழலான ஆள் ஆரவரமற்ற இடத்தில் அமர்ந்தாலும் தியானத்தில்ஈடுபட முடியவில்லை என்று பலர்பலவிதமான காரணங்களை கூறுகின்றனர்.

தியானத்தில் அமர்ந்ததும் தியானம் வரவேண்டும் என்று நினைப்பதில் தவறில்லை, ஆனால் அதற்கு பல பயிற்சிகளை மனதிற்கு தர வேண்டும்.

முதலில் தியானம் வரவில்லையென்றாலும் பரவாயில்லை என்று கண்களை மூடி அமைதியாக அமர ஆரம்பிக்க வேண்டும். இது தியானத்தின் முதல்படி.

இப்படி அமரும்போது மனம் பல கோணங்களில், பல்வேறு சிதறல்களாக சிதைந்து தேவையானது, தேவையற்றது, அனாவசியமானது என்று பல்வேறு கோணங்களில் செல்ல ஆரம்பிக்கும். இதுதான் தியானத்தின் முதல்படிக்கு கிடைத்த வெற்றி என்பதை நாம் நினைவில் வைத்துக் கொள்ளவேண்டும்.

அடுத்த படிக்கு மனதை ஆயத்தப்படுத்த சற்று



புராணங்கள் எளிதாக கைகொடுக்கும், கடவுளை வணங்கி எண்ண நன்மை நடக்கப்போகிறது என்ற சிந்தனை தியானத்தின் இரண்டாம் நிலையில் நம் மனதிற்குள் தோன்ற ஆரம்பிக்கும்.

இதை அப்படியே விட்டுவிட்டால் மனதிற் குள் வெறுமை குடிகொள்ளும், பார்க்கும் பொருள் களின் மீது, பழகும் மனிதர்கள் மீதும் வேண்டா வெறுப்பு மனப்பான்மை தோன்று, இதற்கு காரணம் கடவுளை வணங்கினாலும் துன்பப்படும் நிலையை மனம் முன்நிறுத்தும்.

ஆனால் இந்த நிலை மாறுவதற்கு புராணங் கள், இதிகாசங்கள், நமக்கு பெரும் உதவியாக இருக்கும்.

இதில் கர்மா பற்றிய செய்திகளை அதிகம் படித்தால் நம் மனம் தியானத்தில் ஈடுபடும்போது ஏற்படும் தேவையற்ற எண்ணங்களுக்கு அங் கேயே விடை கிடைத்து, தியானத்தின் அடுத்த அடுத்த நிலைக்கு எளிதாக செல்லலாம்.

பொதுவாக கர்மாவை மூன்று வகையாக பிரித்து வைத்துள்ளார்கள். அவை சுகர்மா விகர்மா மற்றும் அகர்மா.

இவற்றில் முதன்மையாக வருவது சுகர்மா. இது மனிதர்கள் செய்யும் நற்செயல்களுக்கு ஏற்ப நல்ல பலன்களை வாரி வழங்கும்.

விகர்மா என்பது மனிதர்கள் செய்யும் தீய வினைகளுக்கு ஏற்ப தீய பலன்களை கொண்டு வந்து சேர்க்கும்.

அகர்மா என்பது மனிதர்களின் முற்பிறவியில் வினைப் பயனை இப்பிறவியில் கொண்டு வந்து சேர்ப்பதாகும்.

- இந்த மூன்று கருத்துக்களையும் தெளிவாக மகாபாரத இதிகாசம் கூறுகிறது.
- மோகத்தில் வீழ்ந்துவிட்டால் மொத்தமாய் வீழ்ந்திடுவாய் சாந்தனுவாய்....
- சத்தியம் செய்துவிட்டால் சங்கடத்தில் மாட்டிடுவாய் கங்கை மைந்தனாய்..
- முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்





பாண்டுவாய்....

- வஞ்சனை நெஞ்சில் கொண்டால் வாழ்வனைத்தும் வீணாகும் சகுனியாய்...
- ஒவ்வொரு வினைக்கும் எதிர்வினை உண்டு குந்தியாய்...
- குரோதம் கொண்டால் விரோதம் பிறக்கும் திருதராஷ்டிரனாய்....
- பெற்றோர்கள் செய்யும் பாவங்கள் பிள்ளைகளை பாதிக்கும் கௌரவர்கள்...
- பேராசை உண்டாக்கும் பெரும் அழிவினையே துரியோதனனாய்...
- கூடா நட்பு கேடாய் முடியும் கர்ணனாய்...
- சொல்லும் வார்த்தை கொல்லும் ஓர்நாள் பாஞ்சாலியாய்..
- தலைக்கணம் கொண்டால் தர்மமும் தோற்கும் யுதிஷ்டிரனாய்.....
- பலம் மட்டுமே பலன் தராது பீமனாய்....
- இருப்பவர் இருந்தால் கிடைப்பதெல்லாம் வெற்றியே அர்ஜூனனாய்....
- சாஸ்திரம் அறிந்தாலும் சமயத்தில் உதவாது சகாதேவனாய்..
- விவேகமில்லா வேகம் வெற்றியை ஈட்டாது அபிமன்யூ
- நிதர்சனம் உணர்ந்தவன் நெஞ்சம் கலங்கிடான் கண்ணனாய்....
- வாழ்க்கையும் ஒரு பாரதம்தான்.... வாழ்ந்திடலாம் காலமெல்லாம்.

இந்த மகாபாரதம் ஏன் படிக்க வேண்டும் என்ற காரணம் இப்போது நமக்கு எளிதாக புரிந்துவிடும்.

கடவுளை எவ்வளவுதான் வணங்கினாலும் வாழ்க்கையில் முன்னேற்றம் இல்லை என்று புலம்புபவர்களுக்கு விடை இந்த மகாபாரதத்தில் உள்ளது.

இக்காலத்தில் பல பாவங்களை செய்பவர்கள் கூட, அரசு அதிகாரம், பணபலம், படைபலத்துடன் இருக்கிறார்கள். ஆனால் எந்த தீய பழக்கமும் இல்லாமல், யார் மனதையும் புண்படுத்தாமல், புழுவைப் போன்று சாதுவாக வாழும் மனிதர்களுக்கு துன்பங்களும், துயரங்களுமே மிஞ்சுகிறது.

இந்த ஒரு காரணத்தைவைத்து இறைவனையும், மதத்தையும் வெறுத்து பலர் பல்வேறு முடிவுக்கு சென்றுள்ளனர், ஒருசிலர் மதத்தை விட்டே சென்று மாற்று மதத்திற்குள்ளும் ஐக்கியமாகிவிட்டனர்.

ஆனால் உண்மை வேறு...

கர்மாவின் பலனை கண்டிப்பாக அனுபவித்தே தீரவேண்டும். என்ற உண்மை இதிகாசங்கள் தெளிவாக விளக்குவதால்... துன்பம் துயரம் படும்போது, அதற்கு காரணம் இல்லாமல் இருக்காது, கர்மா? விகர்மா? அகர்மா போன்ற காரணங்களால்தான் இதுபோன்ற துன்பம் துயரங்கள் வருகிறது என்று நாம் படித்த கருத்துக்கள் நம் மனதிற்கு எடுத்துரைக்கும்போது, வரும் துன்பத்தையும், துயரத்தையும் எதிர்கொள்ளும் மனோ நிலை ஏற்படுவதுடன், இனி எந்த தீமைகளையும் செய்யக் கூடாது என்ற எண்ணம், துன்பத்தின் வலிகளின் மூலம் செயல்படுத்த மனம் பக்குவப்படும்.

இந்த பக்குவத்தை அடையும்போது




Scan to Read
aanmeegamalar Website







மாதம் இரண்டு முறை
இலவசமாக வெளிவரும்
“ஆன்மிகமலர்
மெயில் புத்தகம்”
aanmeegamalar.com
இணையதளத்தில்
இலவசமாக டவுன்லோடு
செய்தும் படிக்கலாம்


தியானத்தில் அமர்ந்தால் எளிதாக தியானம் சிந்திக்கும்.

அலைபாயும் மனமும் அடங்கி ஒடுங்கி ஒருநிலைப்படும்.

துன்பங்கள், துயரங்கள், கேலிப்பேச்சு, ஏச்சுக்களை மனம் புறந்தள்ள ஆரம்பிக்கும்...

மேற்கண்டவற்றிற்கு மூலகாரணம் எது என்பதை புராண இதிகாசகங்களின் வாயிலாக மனம் அறிந்து கொள்வதால், துன்பங்களைக் கண்டு மனிதன் அஞ்சாமல் அவற்றை மலர்ந்த முகத்துடன் எதிர் கொள்ளும் பக்கும் அடைவதாலும், ஊதாரித்தனமாக சுற்றி திரிந்த மனம், சூரிய உதயத்திற்கு சூரியனை அழைத்து வரும் ஏழு குதிரை பூட்டிய வண்டியைப் போன்று ஒரே சீரான வேகத்தில் செல்ல முற்படும்.

இந்த சமயத்தில் மனிதன் தியானத்தை மேற்கொள்ளும்போது பலன் நிச்சயம் கிடைக்கும்.

எனவே தியானம், யோகம் போன்றவற்றில் ஈடுபடுவதற்கு முன்பும், பக்தி மார்க்கத்தில் செல்வதற்கு முனைவதற்கு முன்பும் கண்டிப்பாக இதிகாசங்கள், புராணங்களை படித்து, அதன் காரண காரியங்களுக்க விடையை தெரிந்து கொண்டால் போதும். தெளிவு பிறந்துவிடும்.

தெளிவு பிறந்துவிட்டால், முயற்சிக்கு இடையூராக வரும் தடங்களை எளிதாக நாம் கையாள முடியும்.

மகாபாராதம், இராமாயணம் இந்த இரண்டு காவியங்கள் பொதுவான அறிவை மனதர்களுக்கு கொடுக்கும் காவியங்கள், இதற்கு அடுத்து இந்திய புராணங்கள் ஒவ்வொன்றையும் படிக்க ஆர்வம் தன்னால் ஏற்பட்டுவிடும்.

முதலில் மனித வாழ்க்கையை சீராக்கினால், அதற்கு பின் திருக்குறள், சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி, மணிமேகலை காவியம் போன்ற ஒவ்வொன்றையும் நாடிச் செல்லும்போது, மனித வாழ்க்கை மட்டுமின்றி, தனது சுற்றத்தார், உறவினர், நாடு, அரசாங்கம், தலைவர்கள், தொண்டர்கள், மக்கள், நீதி என்று அனைத்திலும் தெளிவு பிறக்க ஆரம்பித்துவிடும், மொத்தத்தில் ஒரு மனிதன் பிறந்து வளர்ந்து, வாழ்ந்து, இறப்பது வரை அனைத்திற்கும் தேவையான அனைத்து செய்திகளையும் மேற்கண்ட இதிகாச, இலக்கிய, புராணங்களில் உள்ளது என்பதை எளிதாக அறிந்து கொள்ளலாம்.

பதவி கிடைத்ததும், அடங்க மறுக்கும் மனதை அடக்கவும், பணம் கிடைத்ததும் ஆட நினைக்கும் மனதின் ஓட்டத்தை தடுக்கவும் இந்த இதிகாச புராணங்கள் நமக்கு பேருதவியாக இருக்கும்.

கோடிகளில் புரண்ட பட்டினத்தார் ஒரே நிகழ்வில் சொத்து, சொந்தத்தை தூக்கி எரிந்து கோவணத்துடன் சுற்றியதற்கான காரணம் என்ன என்பதை அறிந்து கொண்டால் வாழ்வின் முடிவும், மனித அகங்காரமும் ஒடுங்கும்.

முக்கியமாக தியானத்தில் ஈடுபடமுடியாமல் தவிப்பவர்கள் இதுபோன்ற இதிகாசங்களை முதலில் படித்துவிட்டு, தியானத்தில் அமர்ந்தால் மனம் ஒருநிலைப்படும். தெளிவு பிறக்கும்.

இது தியானம் சித்திக்க எளிமையான ஒரு குறுக்குவழியாக நாம் கடைபிடிக்கலாம்.


பாதையைதேடி.
போன்: 9444228203



Owned, Published by CV.NATARAJAN. Design by SML.GRAPHICS, CHENNAI. Published from No.18, B.E. Colony, Kodambakkam, Chennai - 600 024.
Editor : CV.NATARAJAN, Cell: 9444228203.
Website: www.aanmeegamalar.com / E-mail: aanmeegamalar@gmail.com

# விருப்ப சந்தா செலுத்த










விருப்ப **சந்தா**

**UPI மற்றும் வங்கி வாயிலாகவும் சந்தா செலுத்துங்கள்...**

बैंक ऑफ़ बड़ौदा
Bank of Baroda

BHIM Baroda Pay
SCAN TO PAY
WITH ANY BHIM UPI APP
Merchant Name : AANMEEGA MALAR TRUST

UPI

**AANMEEGA MALAR TRUST**
**ACCOUNT NO. 49510100003648**
**IFSC CODE: BARB0KODAMB**
**(FIFTH CHARACTER IS ZORO)**
**BANK OF BARODA (KODAMBAKKAM BRANCH)**